உயிர் ஆற்றல்

உடல் மற்றும் மன நலத்துக்கான இதழ்

53 - அக்டோபர் - **2025**

உள்ளே: அறுவைச் சிகிச்சை

53

உயிர் ஆற்றல்

உடல் மற்றும் மன நலத்துக்கான ஓமியோப்பதி வெளியீடு

அட்டையில்

அறுவை சிகிச்சை.

ஆசிரியர் குழு

கொ. பாண்டுரங்கன்

மு. பாஸ்கரன்

து. பத்மநாபன்

Reserved

தொடர்புக்கும் படைப்புகளுக்கும்

nala. mayyam@gmail. com

உயிர் ஆற்றல் இதழ் கட்டுரைகள் பதிவிட

டெலகிராம் -- https://t. me/uyirpraanaa

வாட்ஸ்அப் -- https://chat. whatsapp. com/BbsFhO6dZ62GPBd2CnBiCz

உள்ளடக்கம்

உள்ளடக்கம் 3

பரிணாம வளர்ச்சியின் மேல் வர்க்கம் தொடர்- 25 4
மேல் வர்க்கத்தின் தாவரங்கள்
டாக்டர் முல்லை

அறுவைச் சிகிச்சை - ஒரு குறிப்பு 7

அறுவைச் சிகிச்சை 8
டாக்டர் S. வெங்கடாசலம்

ஆணிவேர்களைத் தேடி 17
Dr. T. மோகன் குமார்

ஓமியோப்பதி மருத்துவத்தில்
உயிராற்றல் என்றால் என்ன? -5 21
சு.கருப்பையா

பரிணாம வளர்ச்சியில்

மேல் வர்க்கம்

(Superclass in Evolution theory)
பகுதி-25

டாக்டர் முல்லை*

19. மேல்வர்க்கத்தின் தாவரங்கள்- துணை வர்க்கம் நான்கு

SUBCLASS	ORDER	FAMILY	REMEDIES
DILLENIIDAE	DILLENIALES		Paeon
	THEALES		Camel-j, Gamb, Haru-ma, Thea
	EBENALES		Diosp-k, Dios-k-c
	SARRACENIALES		
	MALVALES	BIXACEAE	Bix
		BOMBACEAE	Bombax
		CISTACEAE	Cist, Helia-m
		DIPTEROCARPACEAE	Dipt-t
		MALVACEAE	Abel, Adan, Alth, Goss, Hib, Triu-r
		STERCULIACEAE	Abrom-aug, Cac, Choc, Kola, Theob
		TILIACEAE	Til
	PRIMULALES	PRIMULACEAE	Anag, Andr, Cycl, Hott, Lysim, Prim
		MYRSINACEAE	Emb
	CUCURBITALES (VIOLALES IN PAST)	CUCURBITACEAE	Baja, Bry, Cephd, Citl-l, Coloc, Colicin, Cuc, Cucu, Elat, Luf, Mom, Trich
		TAMARICACEAE	Tamar
	CUCURBITALES ENCALES	ERICACEAE	Arbin, Arbu, Arct-m=Manz, Callun=Eric-vg, Chim, Epig, Eric, Gaul, Kalm, Led, Mono, Oxyd, Pyro-r, Rhod, Uva, Vacc-m
	CAPPARALES	BRASSICASEAE	Brass, Buni, Cheir, Coch, Iber, Lepi, Matth, Raph, Sin, Thiosin, Thlaspi, Vesi
		CAPPARIDACEAE	Capp
		TROPAEOLACEAE	Nast trop
	SALICALES		Pop Salin, Salx

இந்த துணை வர்க்கத்தின் முக்கிய அம்சம் என்பது. நிலையில்லா தன்மை, மாற்றம், அதன் பொருட்டு ஏற்படும் சீரமைவு. இந்த துயரர் தன்னுடைய புறச் சூழலிலும் ஆழ்மன வலிமையின் வெளிப்பாடுகளிலும் உணர்ச்சிகளின் வேக மாற்றங்களிலும் எப்பொழுதும் நிலையில்லா தன்மையும். அதீத

மாற்றத்தையும் உணர்ந்து கொண்டிருப்பார். இதனால் அவர்கள் இவ்வுலகில் இயங்கி, பிழைத்து, உயிர் வாழ்ந்து, தன் சமநிலையை தக்க வைத்துக்கொள்ள தாங்கள இந்த அனைத்து மாற்றங்களுக்கும் ஏற்றார் போல் தங்களை சீரமைத்துக்கொள்ள வேண்டும் என்ற உந்துதலில் நிலை கொண்டிருப்பர். ஏனெனில். இவற்றுக்குள் தாங்கள். தொடர்ந்து தகவமைத்து கொள்ளவில்லை என்றால் தங்களின் சுகமான சூழலில் இருந்து தூக்கி எறியப்படுவோம் என்ற பயம் அவர்களை சூழ்ந்து கொள்ளும். இதனால் ஏற்படும் மனக் கிளர்ச்சி என்பது பதட்டமாகவும், அதீத ஆற்றலாகவும் வெளிப்படுத்துவர்.

இவர்களின் உணர்ச்சி நிலை என்பது ஊசலாடிக்கொண்டே இருப்பது வாழ்வின் ஒரு அங்கமாக மாறிவிடுகிறது. இவற்றை சரிசெய்து கொள்ள வேண்டும் என்ற எண்ண ஓட்டத்திலும் நிலையில்லாத கட்டுப்பாட்டையேக் கொண்டிருப்பர். எவ்விதமான நிலை இல்லாத சூழலிலும் அவர்கள் ஒரு ஒழுங்கின்மையும் பாதுகாப்பையும் நிலைநிறுத்த போராடுவர். அதுவே அவர்களுக்கு மன நிம்மதி கொடுக்கிறது. காற்றில் ஊசலாடும் ஒரு இலையைப் போல அவர்களின் வாழ்வில் இந்த நிலை இல்லாதன்மை அவர்களை அலைக்கழிக்கிறது என்று உணர்கிறார்கள். இதனால் எப்பொழுதும் ஒரு சீரான சமமான ஆற்றல் தன்மையை தங்கள் வாழ்வில் ஏற்படுத்திக்கொள்ள அலைந்துகொண்டே இருக்கிறார்கள்.

வீடு அல்லது குடும்பம் என்பது அவர்களுக்கு பாதுகாப்பையும், சுகமும், ஒரு திட நிலையும் தருகிறது. ஆகவே தங்கள் வீட்டை விட்டோ குடும்பத்தை விட்டோ தூரம் செல்ல வேண்டும் என்பது அவர்களுக்கு மிகுந்த பதட்டத்தை அளிக்கிறது. ஏனெனில் அவ்வாறான ஒரு நிலை என்பது வாழ்க்கை ஓட்டத்தில் சம நிலையை பாதிக்கிறது என்பதாலே அதனை மீண்டும் தக்க வைத்துக்கொள்ள அவர்கள் எப்பொழுதும் முயற்சி எடுக்கின்றனர்.

வினோதமாகவும். அசாதாரணமாகவும். ஆச்சரியமாகவும், தனக்கு முன்னனுபவம் இல்லாத விஷயங்களிலும் அவர் வித்தியாசமாக உணர்கிறார். தனக்கு மிகவும் பழக்கமான ஒன்றுடனே அலுவல்களை கடந்து செல்ல எத்தனிக்கிறார். ஏனெனில் மாற்றம் அவர்களை இந்த பாதுகாப்பான, சுகமான நிலையிலிருந்து தள்ளிவிட்டுவிடும் என்ற பயம் உண்டாகிறது. இருந்தும்.

சில நேரங்களில் இதற்கு எதிர்மறையாகவும் உணர்கிறார். யாதெனில். இவ்வாறு தாம் வழக்கமான ஒன்றுடன் வாழ்வை தினமும் கடந்து செல்வது என்பது தேங்கி நின்ற தண்ணீரைப் போல எந்த மாற்றமும் இன்றி ஒரே இடத்தில் கிடப்பதாய். உணர்கிறார். அதனால் தான் இதனை விட்டு வெளியேறி வேறு ஒரு அனுபவத்தை எதிர்கொள்ள வேண்டு மென்று விழைகிறார். இருந்தும் அந்த அனுபவத்தில். நுழைந்து அதனை முழுமையாக கண்டறிவதற்குள் தன்னுடைய பாதுகாப்பு, ஒழுங்கு, இன்பம், தன்னலன் இவற்றை இழப்பது போன்று பயம் உண்டாவதால் மீண்டும் தான் கட்டுப்பாடு என்று நினைத்த தன் இயல்பு நிலைக்கே திரும்ப நினைக்கிறார். அவர்களின் முழுநேர ஏக்கம் என்பது கவனிப்பும், மனம் மற்றும் உடலுக்கு ஊட்டமும், பாதுகாப்பும் மட்டுமே. தான் கைவிடப்பட்டு விடுவோம் என்ற ஆழ்ந்த பயம் எப்பொழுதும் நிலைத்திருக்கிறது.

முதல் மற்றும் இரண்டாம். சூப்பர் கிளாஸ். மருந்து வகையினர் போலல்லாமல் அவர்கள் தன்மனம் மற்றும். செய்கையில், வெளி உலகிலும் தன்னை,

பாதுகாத்து கொள்பவர்கள் இடமும் ஒருவித முதிர்ந்த பாவனைகளையே காட்டுகின்றனர் ஏனெனில். இந்த நான்காம் சப் கிளாஸ் வகையினர். யார் மீதும் சார்ந்து வாழ்வது இல்லை. முழுதாய் சார்ந்து வாழாமல் இருந்தாலும், தன்னிலையில் நிலைத்து தனக்கான தேவைகளை பூர்த்தி செய்துகொள்ளவும் அதற்காக சண்டையிட்டு அல்லது உலகத்தின் நியதிகளை எதிர்த்து போராடவும் தைரியமற்ற மனநிலை கொண்டுள்ளனர். அவர்களின் இந்த நிலைத்தன்மையும் பாதுகாப்பும் ஆட்டம் கண்டால் இவர்கள் வெறுமை நிலையை உணர்கின்றனர். நான் கைவிடப்படுவேன் என்ற பதட்டம் மீண்டும் தான் இழந்தவைகளை போய் பற்றிக் கொள்ள வேண்டும் என்ற அதீத ஆசையும் சார்ந்து வாழ வேண்டிய நிலையும் சில நேரங்களில் நீண்ட கால மன அழுத்தமும் இவர்களிடம் காணப்படுகிறது.

இந்த சப் கிளாஸ் நான்கில் வரும் வழக்கமான மருந்துகள், அப்ரோமா அகஸ்ட்டா, சஃலான்ற இண்டிக்கா, ஹைப்பெரிக்கம், தியா, சிஸ்டஸ் கான்டென்சிஸ், காசிப்பியம், சாக்லேட், சைக்ளமென், பிரயோனியா ஆகும்

இந்த நான்காம் சப் கிளாஸ் உடன் ஒரே நேர்கோட்டில் வருகின்ற சூப்பர் கிளாஸ் மருந்துகளும் இந்த நிலைத்தன்மையும் பாதுகாப்பும் உண்மையும் நிறைந்த வாழ்வையே எதிர்நோக்குகின்றனர். இந்த சூப்பர் கிளாஸில் வரும் விலங்கினங்களும் விளங்கின மருந்துகளும் தனிம மருந்துகளும் நோசோடு வகையைச் சேர்ந்த மருந்துகளும். இதேபோல் ஒரு நிலைத்தன்மையை தங்கள் வாழ்வில். நிலைநிறுத்திக்கொள்ளவும் அதற்காக வெவ்வேறு வழிகளில் போராடி அவர்களின் தனித்துவத்தை வெளிப்படுத்துகின்றன. மாற்றத்தை எதிர்கொள்ள பயமும். அவற்றை தடுத்து தங்களின் உறுதியான நிலைப்பாட்டை தகவமைத்துக் கொள்ளவே நினைக்கின்றனர். ஏதோ ஒரு சூழ்நிலையில் ஒரு புதிய அனுபவத்தை அவர்கள் எதிர்கொள்ள வேண்டி வந்தால், அவற்றை மிகவும் குறைந்த காலம் மட்டுமே அவர்களால் தாக்குப் பிடித்துக் கொள்ள முடிகிறது. மேலும் அவர்களின் உள் மற்றும் வெளிப்புற சூழல்களை சம நிலையில் தக்க வைத்துக்கொள்ள தங்களால் முயன்ற அளவு அவர்கள் போராடுகின்றனர். இவ்வகையான உணர்வுகளின் வெளிப்பாடுகளே நமக்கு அவர்களின் தனித்துவத்தை உணர்ந்து சூப்பர் கிளாஸ் நான்காம் வகை மருந்துகளை பிரித்து அறிய உதவுகின்றது.

---தொடரும்

***Dr. B. முல்லை, BHMS, MD (HOM)**



அறுவைச் சிகிச்சை பற்றிய குறிப்பு

டான் காட்

ஒரு காலத்தில் டான்சில் அறுவை நடந்தது. அப்பன்டிக்ஸ் அறுவை நடந்தது. இவ்வாறு நடந்த பழைய அறுவை சிகிச்சைகள் தற்பொழுது நடப்பதில்லை. அவ்வாறு அறுவை சிகிச்சை செய்ததால் பல பின் விளைவுகள் நடந்ததன் காரணமாக பல ஆண்டுகள் பொறுத்து அவைகள் நிறுத்தப்பட்டன.

இம்மாதிரி தற்பொழுது நடக்கும் பல அறுவை சிகிச்சைகளும் பிற்காலத்தில் பிரச்சினையாக இருக்கக்கூடும். ஒரு சிலர் மூக்கு அடைப்பு என்று ஆபரேஷன் செய்வார்கள். ஆபரேஷன் செய்த சில மாதங்களுக்குப் பிறகு திரும்பவும் சதை வளரும். ஆபரேஷன் செய்வார்கள் இவ்வாறு நிறைய முறை அறுவை சிகிச்சை செய்து கொண்டவர்கள் உண்டு. சிறுநீரகக் கல்லுக்கு ஆபரேஷன் செய்வார்கள். திரும்பவும் சிறுநீர் கல் வரும். பித்தப்பை கல் வரும். ஏன் அவைகள் வருகின்றன. ஆபரேஷன் செய்த பின்னால் அந்த கற்கள் வரக்கூடாது அல்லவா. உடல் பற்றிய இந்த வகையில் மருத்துவ அறிவியல் இல்லை. அனுபவத்தில் தான் நடக்கிறது.

விபத்தில் ஏற்பட்டவைகளையோஅல்லது புற்றுநோய் கட்டிகளையோ ஆபரேஷன் செய்தால் பிரச்சினை கிடையாது. ஆனால் சில வியாதிகளில் வரும் கட்டிகள் எத்தனை முறை ஆபரேஷன் செய்தாலும் திரும்பவும் அந்தப் பிரச்சினை தொடரும். இதை புரிந்து கொண்டு நாம் ஆபரேஷன் செய்து கொள்ள வேண்டும்.

சில வைத்திய முறைகளில் மருந்து கொடுத்து தீர்க்கப்படுகிறது சித்த ஆயுர்வேத ஹோமியோ முறைகளில் கட்டிகளை வராமல் செய்வதற்காக பல மருந்துகள் உள்ளன. இந்த மருத்துவ முறைகளில் அடிப்படையான பிரச்சனை தீர்க்கப்படுவது தான் அதற்கு காரணம்.

நவீன மருத்துவ முறையில் அறுவை சிகிச்சை செய்வதற்காக மயக்க மருந்து கொடுக்கப்படுகிறது. இந்த ஆபரேஷனை விட மயக்க மருந்தின் பிரச்சனைகள், பின் விளைவுகள் அதிகம். காரணம் ஆபரேஷன் என்பது உடலில் உள்ள உறுப்பை எடுத்து விடுகிறது. அது பாதிப்பு அல்ல. ஏனெனில் அந்த இடத்தில் உள்ள காயம் சரியாவதற்கு காரணம் உடலின் சக்திதானே ஒழிய மருந்து அல்ல.. ஆனால் இந்த மயக்கம் மருந்தாக வெளியில் இருந்து ஒரு ரசாயன பொருள் உடலுக்கு தருவது நரம்பு மண்டலங்களை பாதிக்கிறது. நரம்பு மண்டலங்களை பாதிப்பதால் தான் அந்த வலி நரம்பின் வழியாக செல்வது உணரப்படாதவாறு செய்யப்படுகிறது. மயக்க மருந்து நரம்பு மண்டலத்தில் தங்கி விடுவதால் உண்டாகும் பக்க விளைவுகள் வெளிப்படையாக தெரிவதில்லை.

உடலில் ஒரு கட்டி ஏற்படுகிறது என்றால் அது உடலின் தன்மையை பொறுத்தது. அதனால் அந்த உடலின் தன்மைக்காக மருந்து தரப்படும் பொழுது அந்த கட்டி குறைந்து விடும் மேலும் கட்டி வளராமலும் பார்த்துக் கொள்ளும்.. அதனால் கட்டியை அறுத்துத்தான் எடுக்க வேண்டும் என்பது தவறு என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும்.

========அறுவைச் சிகிச்சை========

டாக்டர் S.வெங்கடாசலம்

ஆபரேஷன் ஜாக்கிரதை!

அறுவைச் சிகிச்சை என்பது மருத்துவ விஞ்ஞானத்தின் ஒரு பகுதியாக வளர்ந்துவிட்டது. ஒவ்வொரு ஆண்டும் அறுவைச் சிகிச்சை மருத்துவத்தில் (MS) முதுநிலைப் பட்டம் முடித்து ஆயிரக்கணக்கில் நிபுணர்கள் வந்து கொண்டிருக்கின்றனர். இவர்களின் சேவை இவர்கள் சார்ந்துள்ள அலோபதி மருத்துவத்தில் முக்கியத்துவம் பெறுகிறது. எதற்கெடுத்தாலும் ஆபரேஷன் தேவை என்றும் இல்லையென்றால் உயிர் பிழைப்பது அரிது என்றும் எச்சரிக்கப்பட்டு ஆபரேஷனுக்கு பலவந்தமாக உட்படுத்தப்படும் போக்கு அதிகரித்துக் கொண்டே செல்வதை மக்கள் கசப்புடனும், வெறுப்புடனும் உணரத் தொடங்கிவிட்டனர். நோயுற்ற உறுப்புகளை நீக்குவதால் மட்டுமே நோயைக் குணப்படுத்த முடியும் என்பது தவறு. நோயுற்ற உறுப்பு முழு அளவில் பாதிக்கப்பட்டால் அல்லது உயிரிழப்பு ஏற்படும் என்றால் மட்டுமே அறுவைச் சிகிச்சை தேவை.

அறுவை சிகிச்சையை ஹோமியோப்பதி முற்றிலும் எதிர்க்கவில்லை. பிறவி உடலமைப்புக் கோளாறுகள் (Congenital Deformities) விபத்துகளால் உடல் உறுப்புகளில் ஏற்பட்ட கடுமையான சேதங்கள், முற்றிய நிலைக் கட்டிகள் போன்ற சூழ்நிலைகளில் அறுவைச் சிகிச்சையின் நியாயமான பயன்பாட்டை அங்கீகரிக்காமல் இருக்க முடியாது.

ஆனால் மருந்து, மாத்திரைகளாலேயே குணப்படுத்திக் கொள்ள வாய்ப்புள்ள பல்வேறு வியாதிகளை, அதற்கான அவகாசமோ, வாய்ப்போ வழங்காமல், முயற்சிகள் மேற்கொள்ளாமல் அறுவைச்சிகிச்சை செய்வதைத்தான் ஹோமியோப்பதி விமரிசிக்கிறது. அறுவைச் சிகிச்சை வெற்றி என அறிவித்தாலும், பாதிக்கப்பட்ட பாகத்தை அறுவை செய்து நீக்கியதால் மட்டும் முழு குணம் ஏற்பட்டுவிடாது என்பதை விரைவிலேயே ஒவ்வொரு நோயாளியும் மறு அனுபவமாக (Reexperience) தெரிந்து கொள்கின்றனர்.

வியாதிக்குறிகளை அகற்றுவதால் மட்டுமே வியாதியின் அடிப்படை நீங்கி விடுவதில்லை. எனவேதான், டான்சில் ஆபரேஷன், செய்து கொண்ட குழந்தைகளுக்கு, டான்சிலால் ஏற்பட்ட எந்தத் தொந்திரவுகளுக்கும் மாறிவிடுதில்லை. வாழ்நாள் முழுவதும் தொடர்கின்றன. மூக்கடைப்பிற்காக (Nasal Blockage) சிகிச்சைக்கு செல்லும் பெரும்பாலோர்க்கு மூக்கினுள் உள்ள சிறிய சதை வளர்ச்சியைக் (POLYPY) காரணம் காட்டி அறுவைச் சிகிச்சை செய்யப்படுகிறது. இருந்த போதிலும் மூக்கடைப்பு நீங்குவதில்லை. மீண்டும் சதை வளர்ச்சி ஏற்படுவதைத் தடுக்க முடிவதுமில்லை. அதே போல, மூல சதையை வெட்டி எறிவதால் மட்டும் மூலத்தின் மூலகாரணம் மறைந்துவிடுவதில்லை. மீண்டும் மூல அவஸ்தைக்கு

ஆளாகின்றனர். பலமுறை மூல அறுவைச் சிகிச்சைக்கு ஆளானவர்கள் இறுதியில் ஹோமியோப்பதி மருத்துவர்களிடம் சிகிச்சை பெற வருவதைப் பார்க்கிறோம்.

இருதய ரத்தக் குழாய்களில் அடைப்பு ஏற்பட்டு வலி ஏற்பட்டு மாரடைப்பு வரை செல்கிறது. ஆங்கில மருத்துவத்தில் அடைப்பை நீக்குவதற்கு பைபாஸ் அறுவைச் சிகிச்சை செய்யப்படுகிறது. அடைப்பின் அளவு 70% வரை இருந்தால் கூட ஆபரேஷன் இன்றி ஹோமியோப்பதி மருத்துவத்தில் குணமாக்க முடிகிறது.

கர்ப்பப்பை கட்டிகளை ஆங்கில மருத்துவத்தில் ஊசி, மருந்துகள் மூலம் குணமாக்கும் வாய்ப்பு மிக மிகக் குறைவு. எனவே கர்ப்பப்பை அறுவைச் சிகிச்சை (Hysterectomy) மூலம் அகற்றப்படுகிறது. முற்றிய நிலையிலுள்ள புற்றுநோய்க் கட்டிகள் தவிர மற்ற அனைத்து வகை கட்டிகளையும் ஆபரேஷன் இன்றி குணப்படுத்த நம்பகமான வாய்ப்பு உள்ளது.

சிறுநீரகக் கற்களை அறுவைச் சிகிச்சையின்றி அகற்றுவதோடு மேலும் கற்கள் உருவாகும் போக்கினை தடுக்கவும் ஹோமியோ சிகிச்சை உதவுகிறது. உடலியல் அமைப்பையும், வளர்சிதை மாற்றக் கோளாறுகளையும் சரிசெய்கிறது.

உண்மை ஒரு நாள் வெளியாகும் – அதில்

உள்ளங்கள் எல்லாம் தெளிவாகும்

என்று பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரத்தின் பாடல் வரிகள் நினைவுக்கு வருகின்றன. பல சந்தர்ப்பங்களில் அறுவை சிகிச்சை தேவையில்லை என்ற உண்மை ஒரு புறமிருக்க, பல்வேறு நோயாளிகள் அறுவை சிகிச்சைக்கு சற்று முன்னும் பின்னுமாய் ஹோமியோப்பதி மருத்துவர்களை சந்திக்கின்றனர். தவிர்க்க முடியாமல் அறுவை சிகிச்சை மேற்கொள்வதாகக் கூறி அறுவை சிகிச்சை காரணமாக பாதிப்புகள் நேராமல் இருக்க ஹோமியோ மருந்துகளைக் கோருகின்றனர். அப்படிப்பட்ட சூழ்நிலையிலும் ஹோமியோப்பதி அருந்துணை புரிந்து காக்கிறது. பொதுவாக அறுவை சிகிச்சைக்கு முன்பு எந்தவிதமான உணவும், பானமும் மருந்தும் சாப்பிட வேண்டாம் என்று அறிவுறுத்தப்பட்டாலும் ஹோமியோ மருந்து மாத்திரைகள் எடுத்துக் கொள்வதால் அறுவை சிகிச்சைக்கு எந்தவித இடையூறும் நேர்வதில்லை.

தேவைப்படும் காரணங்கள், சூழ்நிலைகள், குறிகளுக்கு ஏற்ப அறுவை சிகிச்சைக்கு முன்பும் பின்பும் கீழ்கண்ட ஹோமியோ மருந்துகளை மருத்துவர் ஆலோசனையுடன் பயன்படுத்தலாம்.

- அறுவை சிகிச்சையின் போது அல்லது சிகிச்சைக்குப் பின்னர் இறந்து போவோம் என்ற பயத்துடன் இருப்பவருக்கு **அகோனைட்** கொடுக்கலாம்.
- **ஜெல்சிமியம், அகோனைட்** போன்ற மருந்துகளை அறுவை சிகிச்சைக்கு முதல் நாள் இரவு ஒரு வேளையும், அறுவை சிகிச்சை நாளன்று காலை ஒரு வேளையும், அறுவை சிகிச்சை முடிந்த பின் பயம், பதற்றம் நீடித்தால் சில வேளைகளும் தரலாம்.
- பொதுவாக எந்த ஒரு அறுவை சிகிச்சைக்கும் இரண்டு நாள் முன்னதாக தினம் 3 வேளை வீதம் **ஃபெர்ரம் பாஸ்** 6 எடுத்துக் கொள்வதால், அறுவை சிகிச்சையால் ஏற்படும் அதிக ரத்த ஒழுக்கையும், தொற்றுநோயையும் கட்டுப்படுத்தலாம் (Infection and hemorrhaging).

- அறுவை சிகிச்சைக்கு முன் பதற்றம், நடுக்கம், மனச்சோர்வு ஏற்படும் போது **ஜெல்சிமியம் 30** பயன்படும்.
- அறுவை சிகிச்சைக்குப் பயன்படுத்திய மயக்க மருந்தின் விளைவுகளைப் போக்க **அசிடிக் ஆசிட்**, மயக்க மருந்தினால் ஏற்படும் வாந்தியைக் கட்டுப்படுத்த **சாமோமில்லா** போன்ற மருந்துகள் பயன்படும்.
- அறுவை சிகிச்சைக்கு பின் சில காலம் கழித்துத் தழும்புள்ள இடத்தில் வலி ஏற்பட்டால் **ஸ்டாபிசாக்ரியா** பயன்படும்.
- அறுவை சிகிச்சையால் ஏற்பட்ட தழும்பு (Scarring & Adhesions) மறைய **தயோசினமினம் தாய்** திரவத்தையும் **காலண்டுலா தாய்** திரவத்தையும் வெளிப்பூச்சாக தினம் 1 வேளை சில வாரம் அல்லது சில மாதம் பயன்படுத்த வேண்டியிருக்கும். **கிராபைட்டிஸ் 30** வாரம் 1 வேளை மட்டும் சாப்பிட வேண்டும்.
- அறுவை சிகிச்சைக்குப் பின் சிறுநீர் தடை பட்டால் **காஸ்டிகம்** கொடுக்கலாம்.
- அறுவை சிகிச்சை முடிந்த பின் ரத்த அழுத்தக் குறைவு ஏற்பட்டு, உடல் வெப்பமும் குறைந்தால் **காம்போரா** குணப்படுத்தும்.
- தையல் போட்ட இடம் நோக்கி சுற்றியுள்ள தோல் இழுக்கப்பட்டிருந்தால் **காலிபாஸ்** கொடுக்கலாம்.
- தையல் பிரித்தபின் கருநிறும் தெரிந்தால், சதைகளில் வலி, பலவீனம் காணப்பட்டால் **சல்ப்யூரிக் ஆசிட்** கொடுக்கலாம்.
- கருச்சிதைவு (Dilation & curatege) சிகிச்சைக்குப் பின் **பெல்லடோனா 30, ஆர்னிகா, 30 சபீனா 30** (குறிகளுக்கேற்ப) 4 மணி நேரத்திற்கு ஒரு வேளை வீதம் சில நாள் தேவைப்படும்.
- குழந்தை பிறக்கும் வழியை இலகுவாக்கு செய்யப்படும் சிறிய அறுவைக்குப் பிறகு **பெல்லிஸ் பெரனிஸ் 30** அல்லது **ஸ்டாபி சாக்ரியா 30** தினம் 4 வேளை சிலநாள் கொடுக்கலாம்.
- அறுவை சிகிச்சை மூலம் கர்ப்பப்பை அகற்றப்பட்ட பின் (Hysterectomy) **காஸ்டிகம் 30** அல்லது **ஸ்டாபிசாக்ரியா 30** தினம் 4 வேளை வீதம் சில தினங்கள் கொடுக்க வேண்டும்.
- மார்பக கவர்ச்சிக்காக பிளாஸ்டிக் சர்ஜரி செய்யும் பெண்களுக்கு சிகிச்சைக்குப் பின் **பெல்லிஸ் பெரன்னிஸ் 30** தினம் 3 வேளை சில தினங்கள் கொடுக்கலாம்.
- முதுகுத் தண்டில் அறுவை சிகிச்சை எனில் **ஹைபரிகம் 30** பயன்படும்.
- கண் அறுவை சிகிச்சைக்குப் பின் **லேடம்பால் 30** 4 மணி நேரத்திற்கு 1 வேளை வீதம் 3 நாட்கள் எடுத்துக்கொள்ளலாம்.
- அப்பெண்டிசிடிஸ் அறுவை சிகிச்சையைத் தொடர்ந்து **ரஸ்டாக்ஸ் 30** தினம் 3 வேளை தரலாம்.
- சுக்கிலச் சுரப்பியில் (Prostate Gland) அறுவை சிகிச்சை நடைபெற்றபின் **ஸ்டாபி சாக்ரியா 30** பயன்படுத்தலாம்.
- பித்தப்பையில் நடைபெற்ற அறுவை சிகிச்சைக்குப் பின் **லைகோபோடியம் 30** பயன்படும்.
- அடிவயிற்று அறுவை சிகிச்சைக்குப் பின் உப்புசம் (Flatulance) ஏற்பட்டால் **சைனா** அல்லது **லைகோபோடியம்** முழு நிவாரணமளிக்கும்.
- அறுவை சிகிச்சையைத் தொடர்ந்து அடிக்கடி வாயு உற்பத்தியாவதும் வெளியேறாமல் இருப்பதும், வயிற்றுத் தொந்திரவுடன் மலச்சிக்கலும் ஏற்படுமாயின் ரபேனஸ் நன்மை செய்யும்.
- அறுவை சிகிச்சை மூலம் பற்களை அகற்றுவதற்கு முன் ஆர்னிகா பயன்படுத்தலாம். பற்களை அகற்றிய பின்னர் அதிர்ச்சி மற்றும் ரத்தம் பெருக்கை கட்டுப்படுத்த ஆர்னிகா, பெர்ரம் பாஸ், ஹைபரிகம், பாஸ்பரஸ் பயன்படும். ஆனால், தாடை வலி, நரம்பு வலி ஏற்பட்டு நீடிக்குமானால் ஹெக்லலாவா அல்லது ஹைபரிகம் 200 நல்ல பலன் அளிக்கும்.
- டான்சில் மற்றும் அடினாய்டு அறுவை சிகிச்சையை (Tonsil Lectomy and Adenoidectomy) தொடர்ந்து 4 மணி நேரத்துக்கு 1 வேளை வீதம் ரஸ்டாக்ஸ் 30 சில நாட்கள் சாபிடுவது நல்லது.

- கண்பொறை (Cataract) அறுவை சிகிச்சைக்குப் பின் பார்வை மங்கல் ஏற்பட்டால் செனேகா பயன்படும்.
- அறுவை சிகிச்சைக்கு முன்னும், செய்த பின்னும் ஸ்டாபிசாக்ரியா 30 அல்லது ஏஸ்குலஸ் 30 பயன்படும்.
- பௌத்திரம் அறுவைக்குப் பின்னர் காலிபாஸ் 30 பயன்படும்

வாசமில்லா மலரிது.

நாராயணனுக்கு வந்த துன்பம் யாருக்கும் வரக் கூடாது. இது அவரே அவ்வப்போது சொல்லி வந்த மனக்குமறல் தான். 42 வயதான நாராயணன் சாலையோர டீக்கடை ஒன்றில் டீ மாஸ்டர். 20 வருட அனுபவம். அனுபவம் கூடக் கூட மதிப்பு, மரியாதை, சம்பளம் எல்லாம் கூட வேண்டும். நாராயணனுக்கு அது எதிர்மறை. ஏற்கனவே இரண்டு, மூன்று டீக்கடைகளிலிருந்து வேலையை விட்டு அனுப்பப்பட்டுள்ளார்.

வாடிக்கையாளர்களிடமிருந்து அவர் மீது தினமும் புகார்கள் வந்து கொண்டே இருக்கின்றன. டீ கிளாசில் மண்ணெண்ணெய் வாசனை இருந்தால் கூட நாராயணனுக்குத் தெரியவில்லை. வாடிக்கையாளர்கள் சொன்ன பிறகு தான் தெரிகிறது. அப்போதும் கூட முகர்ந்து பார்த்தால், அவர் நாசிக்கு எந்த வாசனையும் பிடிபடுவதில்லை. கொஞ்சம் கொஞ்சமாக தன் பிரச்னையை உன்னிப்பாகக் கவனித்து வந்தார். தினமும் அருகில் வடை சுட்டுக் கொண்டிருக்கும் போது வாசனை தெரியவில்லை. புகையின் நெடி கூட உணர முடியவில்லை. வீட்டில் சமையல் வாசனை இல்லை. சாப்பிடும் போது குழம்பும், காய்கறிகளும் மணக்கவில்லை. நாளடைவில் அவற்றில் ருசியும் இல்லாதது போல் ஆகிவிட்டது.

முதலில் அரசு மருத்துவமனையிலும், பின்னர் தனியார் மருத்துவமனைகளிலும் காது மூக்குத் தொண்டை நிபுணர்களிடம் ஒரு வருட காலமாகத் தொடர்ந்து சிகிச்சை பெற்று வந்த போதிலும் எந்தவித முன்னேற்றமும் இல்லை. தனக்கு வந்திருக்கும் விபரீதமான நோய் குணப்படுத்த முடியாத ஒன்று என்ற மனநிலைக்கு வந்த பின்னர் தன்னை நம்பி வாழும் குடும்பத்தை எண்ணி மனத்திற்குள் மருகினார். அவரது நீண்ட கால நண்பரான பழக்கடை பழனிச்சாமியின் ஆலோசனையின் படி ஹோமியோப்பதி சிகிச்சைக்கு வந்தார்.

அவரது துயரை – உடல்ரீதியான, மனரீதியான பாதிப்புக்களை தெளிவாக விசாரித்தறிந்த பின் அவருக்கு ‘பல்சடில்லா’ என்ற ஹோமியோ மருந்து வழங்கப்பட்டது. இரண்டு வார சிகிச்சையில் ஓரளவு வாசனையை உணர முடிவதாகக் கூறி மகிழ்ச்சி அடைந்தார். உணவின் சுவையும் தென்படத் துவங்கியது. மெல்ல மெல்ல அவரது உள்ளத்தினுள் நம்பிக்கை வெளிச்சம் பரவத் துவங்கியது. மூன்று மாத சிகிச்சைக்குப் பின் அவருக்கு முழுமையான வாசனைத் திறன் மீண்டும் வந்து விட்டது. மனைவியுடன் வந்து கலங்கிய கண்களுடன் கும்பிட்டு நன்றி தெரிவித்துச் சென்றார்.

**

ஷேக்ஸ்பியரின் ‘மாக்பெத்’ காவியத்தில் (Act 5, Scene 1, Page 3) மாக்பெத் உணர்ச்சிப் பெருக்கோடு கூறும் வசனம் இது ‘Here is the Smell of the blood still All the perfumes of Arabia will not sweeten this little hand. Oh. Oh.Oh!’’ டன்கன்பிரபு கொல்லப்பட்டு நீண்ட காலத்திற்குப் பிறகும் கைகளில் ரத்த வாடை அடித்துக் கொண்டே இருக்கிறது. இது மனநிலை சார்ந்த பிரமையாக (Delusion) இருக்கலாம். அல்லது நுகர்வுத் திறன் சார்ந்த கோளாறாக (Smelling Disorder) இருக்கலாம்.

ஆம்! எத்தனை எத்தனையோ நுகர்வுத்திறன் பாதிப்புகள் உள்ளன. அவற்றில் ஒன்று தான் வாசனையிழப்பு நோய். இயல்பான நுகர்வுத் திறன் உள்ளவர் 10000 வாசனைகளை அறிய முடியும். இதில் தடை ஏற்பட்டால் மனச்சோர்வும், பதற்றமும் ஏற்படும். உணவும் சுவைக்காது. சுவைக்காத உணவாக உண்பதால் சத்து கிரகிப்பும் குன்றி விடும். கெட்டு விட்ட உணவு, நெருப்பின் புகை, இதர வாசனைகளை அறிய முடியாத நிலை ஆபத்தானது.

ஆண்டுதோறும் 2 லட்சத்திற்கும் அதிகமானோர் நுகர்வுத் திறன் பாதிப்புகளுக்காக ஆங்கில மருத்துவமனைகளுக்கு வருகின்றனர். எத்தனை சதவிகிதமானோர் குணமாகின்றனர் என்பது தான் ஹோமியோபதியினர் எழுப்பும் கேள்வி. Smelling Disorders எனப்படும் கோளாறுகள் வயதானால் அதிகரிக்கிறது. பெண்களை விட ஆண்களிடம் அதிகம் காணப்படுகிறது. 60 வயது முதல் 69 வயதுக்கு உட்பட்ட ஆண்களில் நுகர்வு பாதிப்புகள் 25 சதவிகிதத்தினரிடம் பெண்களின் 11 சதவிகிதத்தினரிடமும் காணப்படுவதாக ஓர் ஆய்வு சுட்டிக் காட்டுகிறது.

Smelling Disorders பலவகைகளாக உள்ளன. Hyposmia (குறைந்த வாசனைத் திறன்), Hyperosmia (அதீத நுகர்வுத் திறன்), ஹிஸ்டீரியா / நரம்பியல் பாதிப்புகளால் ஏற்படுவது) Dysomia (மோசமான வாசனை உணர்வு – Perversion of the Sense of Smell – யதார்த்தத்துக்கு புறம்பானது) Parasomia (யதார்த்தத்தில் உள்ள..மோசமான வாசனை வேறொரு வாசனியாகத் தெரிதல்) Anosmia (வாசனைத் திறன் முற்றிலும் இல்லாமை – Inability to detect odours இந்நோயி உடன் நிகழ்வாக சுவையுணர்வும் பறிபோக நேரிடும்) இத்தனை வகைகளுக்கும் ஹோமியோபதியின் சிகிச்சைகள் உள்ளன என்பது சிறப்புச் செய்தி.

**அழகான மூக்கினுள் இத்தனை ஆபத்துக்களா? என்று வியக்கும் அளவுக்கு மூக்கு சார்ந்த நோய்கள் ஏராளம் உள்ளன. சளி, தடுமம், தும்மல் போன்றவை எல்லா மருத்துவ முறைகளும் எதிர்கொள்கிற பொது நோய்கள். வாசனை உணர்வு அற்றுப் போனால்? பல மருத்துவ முறைகள் பலன் அளிக்காமல் போனால்? வாழ்வின் போக்கு எப்படி இருக்கும்? அபத்தமாக, ஆபத்தாக அல்லவா இருக்கும்! சாக்கடையின், குப்பை லாரியின் துர்நாற்றமும் தெரியாது! சந்தனம், கற்பூரத்தன் நறுமணமும் தெரியாது! மோப்ப உணர்வு குறைந்து விட்டால் நாவின் சுவை உணர்வு மொட்டுக்களால் எல்லாச் சுவைகளையும் உணர முடியாது. உணவு சப்பென்றிருக்கும். மணத்திற்கு காரணமான மூலக் கூறுகள் காற்றுவழி கடந்து நாசி புகுந்து,உட்புற ஆழம் சென்று வாசனை உணர்வு செல்களை (Olfactory Cells, Olfactor nerves, Brain) ஆகிய மூன்றில் ஏதாவது ஒன்றில் பிரச்னை என்றாலும் வாசனை இழப்பு ஏற்படுகிறது.

சளி, தடுமம், ஒவ்வாமை நீர் ஒழுக்கு போன்ற பாதிப்புக்களால் மூக்குப் பாதையிலுள்ள பூந்தசைகள் பாதிக்கப்பட்டு வாசனையிழப்பு ஏற்படக் கூடும். இது தற்காலிகமானது. மூக்கினுள் ஏற்படும் சில அடைப்புக்களாலும் (Septum Deviation – எலும்பு மாறுபாடு, Polyp – சவ்வு வளர்ச்சி) வாசனை பாதிப்பு ஏற்படக் கூடும்.

தவிர முதுமையின் காரணமாக ஏற்படும் அல்சீமர், பார்க்கின்சன் போன்ற நோய் நிலைகளிலும் நாட்பட்ட நீரிழிவிலும் நரம்புகள் பாதிக்கப்படுவதால் வாசனைத் திறனும் பாதிக்கபடலாம். சிலருக்கு மூளையில் அறுவைச் சிகிச்சை காரணமாக, ரேடியம் கதிர் சிகிச்சை காரணமாக, சில வகை ஆங்கில மருந்துகளின் பக்க விளைவு காரணமாக வாசனைத் திறன் பாதிக்கபடலாம். 'Treat the patient not the disease' என்ற ஹோமியோப்பதி அணுகுமுறையின்படி ஆய்வு செய்து, அடிப்படைக் காரணம் கண்டறிந்து சிகிச்சை அளித்தால் மூக்கு நோய்களுக்கு முழு நிவாரணம் நிச்சயம்!

ஆசனவாய் நோய்கள்

,
முக அழகிற்கும், முடி அலங்காரத்திற்கும் தினமும் கவனம் செலுத்துபவர்கள் ஆசனவாய் சார்ந்த நோய்களான மலச்சிக்கல், மூலம், பவுத்திரம், சதைகள், கட்டிகள், வெடிப்புகள் ரத்தப்போக்கு ஆகியவை குறித்து அக்கறை செலுத்துவதில்லை. காரணம் கூச்சத்தினாலும், அச்சத்தினாலும் ஏற்படும் தயக்கம். 'அறுவை சிகிச்சை அவசியம்' என்று மருத்துவர்கள் சொல்லி விடுவார்களோ என்றுபயத்தில் நாட்களை நகர்த்திக் கொண்டே போய், நோயை முற்றிய நிலைச் சிக்கலாக வளர்த்து விடுகிறார்கள். ஆசனவாய் நோய்களுக்கான ஆரம்ப அறிகுறீகள் தெரிந்தவுடன் சிகிச்சை எடுத்துக் கொண்டால் நலமாக்கல் எளிது.

ஆசனவாயும், மலக்குடலும் இருபுட்டங்களுக்கு நடுவில், பாலுறுப்புகளுக்கு அருகாமையில் மறைவாக அமைந்துள்ளன. சுற்றியுள்ள கொழுப்பு திசுக்களால் ஆசனவாய் பாதுகாப்பாக உள்ளது. மலமும் வாயுவும் வெளியேறும் போது மட்டும் விரிந்து மற்ற நேரங்களில் இறுக்கமாகச் சுருங்கியிருக்கும் தன்மையுள்ள சுருங்கு தசைகள் (sphincters) இங்கு உள்ளன. ஆசனவாயில் நடைபெறும் ஆபரேஷன்களை எளிய, சிறிய (Minor Surgeris) ஆபரேஷன்கள் என்றே ஆங்கில மருத்துவம் கூறுகிறது. ஆயினும் மைனர் ஆபரேஷனுக்குப் பின் பெரிய பின் விளைவுகள் (Major side effects) ஏற்படுவதை முதலில் கூறுவதில்லை.

ஆபரேஷனுக்குப் பின்பு ஆசனவாய் சுருங்குதசைகள் (Sphincter Muscles) பாதிக்கப்பட்டு மலத்தை அடக்கிக் கொள்ளும் தன்மையை இழந்துவிடுகிறது (Incontinence). சிலருக்கு மலக்குடல் அடைப்பு (Stricture) ஏற்பட்டு விடுகிறது.

மூலம் (Piles), பவுத்திரம் (Fistula in Ano), பவுத்திர சீழ்க்கட்டி (Perianal Abscess), பிளவுப் புண் (Fissure in Ano), ஆசனவாய் நமைச்சல் அரிப்பு (Anal Pruritus), தொங்குசதைக் கட்டி (Anal Polyp), மலக்குடல் & ஆசனவாய் பிதுக்கம் (Anal & Rector Prolapse), ரத்தப்போக்கு போன்றவை ஆசனவாய் சார்ந்த பொதுவான நோய்களாகும். ஆயினும் இவற்றில் எந்த நோய் ஏற்பட்டாலும் 'எனக்கு பைல்ஸ் உள்ளது' என்று தான் பலரும் மருத்துவர்களிடம் தெரிவிப்பதுண்டு. தீர விசாரித்தும், உடற்பரிசோதனை செய்தும், தேவையெனில் ஆய்வுக் கூட பரிசோதனைகளுக்கு உட்படுத்தியும் நோயையும், நோய்

நிலையையும் மருத்துவர்கள் கண்டறிந்து உறுதி செய்த பின்னரே சிகிச்சை அளிக்கின்றனர்.

'மூலம்' என்ற நோய் தவிர்த்து பிற முக்கிய ஆசனவாய் நோய்களையும் அவற்றை நலமாக்கப் பயன்படும் ஹோமியோப்பதி மருந்துகள் பற்றியும் பார்ப்போம். (மூலம் தனி கட்டுரையாக விரிவாக எழுதப்பட வேண்டிய ஒன்று).

ஆசனவாய் பிளவுகள் (fissures in Ano) : மலங்கழித்தல் என்பது இயல்பான, சிரமமற்ற உடலியல் நிகழ்வாக நடைபெற வேண்டும். மாறாக மிகக் கடினமான, வேதனை மிக்க நிலை மலங்கழிக்கும் போது ஏற்பட்டால் ஆசனவாய் பகுதி காயம்பட்டு விடும். மலச்சிக்கல் பேர்வழிகளுக்கு மலப்பாதை வழியே மிகக் கடினமான இறுக்கமான மலம் சிரமப்பட்டு வெளியேறுவதன் விளைவே ஆசனவாய் பிளவுப் புண்கள் (Cracks). இது ஆசனவாய் கிழிந்து விடும் நிலையாகும் (Tear in Anus). பிறப்புறுப்பு வழியே பிரவசிக்கும் (Vaginal Delivery) பெண்களுக்கும் ஆசனவாயில் ஏற்படும் அழுத்தங்களால் பிளவுப் புண்கள் ஏற்படக் கூடும்.

ஆசனவாய்ப் பிளவுப் புண்கள் இருப்பதற்கான முக்கிய அறிகுறி

மலங்கழிக்கும் போதும், சிலருக்கு மலம் கழித்த பின்னரும் ஆசனவாயில் கடும்வலி ஏற்படும். இந்நோயைப் பலரும் மூலம் (Piles) என்றே கருதி சிகிச்சைக்கு வருவதுண்டு. இந்நோய் தீவிர (acute) வலியுள்ள வகை. நாள்பட்ட (acute) வலியுள்ள வகை எனப் பிரிக்கப்படுகிறது. நாள்பட்ட வகையில், ஆசனவாயில் முக்கோண வடிவமுள்ள தோல் தொங்கும். இதை Sentinal Pile என்று அழைத்த போதிலும் இது மூல நோய் அல்ல.

தீவிர மற்றும் நாள்பட்ட ஆசனவாய் பிளவுப் புண்களுக்கு ஆபரேஷன் இன்றி, பக்க விளைவுகள் இன்றி ஹோமியோப்பதி மருந்துகள் எளிய முறையில் தீர்வு தருகின்றன. ஹோமியோப்பதி மருந்துகள் மனித உடலின் சீர்குலைந்த இயக்கத்தை ஒழுங்குபடுத்துகின்றன. கடுகளவு தீங்கு கூட ஏற்படுவதில்லை. மிகவும் பாதுகாப்பானவை.

நைட்ரிக் ஆசிட் (Nitric Acid) என்ற ஹோமியோப்பதி மருந்து ஆசனவாய் பிளவுப் புண்களுக்கு ஆபரேஷனின்றி, பக்க விளைவுகளின்றி ஹோமியோப்பதி மருந்துகள் எளிய முறையில் தீர்வு தருகின்றன. ஹோமியோப்பதி மருந்துகள் மனித உடலின் சீர்குலைந்த இயக்கத்தை ஒழுங்குபடுத்துகின்றன. கடுகளவு தீங்கு கூட ஏற்படுவதில்லை, மிகவும் பாதுகாப்பானவை.

நைட்டிரிக் ஆசிட் (Nitric Acid) என்ற ஹோமியோஒபதி மருந்து ஆசனவாய் பிளவுப் புண்களுக்கு அற்புத நலமளிக்கும் திறன் கொண்டது. ஆசனவாயில் கிழிபடுகிற, குத்துகிற, கொட்டுவது போன்ற, வெட்டுவது போன்ற வலி ஆசனவாயில் ஏற்படுமாயின் இம்மருந்து பேருதவி புரிவது திண்ணம். மேலும் கடினமலம், மலத்துடன் ரத்தப்போக்கு போன்ற பிரச்னைகளுக்கும் உடனடித் தீர்வு கிட்டும்.

ரட்டானியா (Ratanhia) என்ற ஹோமியோ மருந்தும் ஆசனவாய் பிளவு நோயில் சிறந்த நிவாரணமளிக்கக் கூடியதாக திகழ்கிறது. மலம் கழித்த பின் மலப்பாதையில் & ஆசனவாயில் அதிகளவு எரிச்சல் உணர்வும் நீண்ட நேரம் நீடிக்கக் கூடிய வலியும்

காணப்படும். ஆசனவாய் வாய் வழியாக மலக்குடலுக்குள் ஒரு கத்தியையோ, உடைந்த கண்ணாடித் துண்டையோ கொண்டு செருகியது போல் வலிப்பதாக நோயாளி விவரிப்பார். ஆசனவாய் மிகவும் இறுகிவிட்டது போல (Constricted) இளகிய மலத்தைக் கூட மிகவும் சிரமப்பட்டு வெளியேற்றும் நிலை ஏற்படும். இத்தகைய நிலையில் ரட்டானியா அற்புதங்கள் நிகழ்த்தும் என்பதை ஒவ்வொரு ஹோமியோப்பதி மருத்துவரும் அறிவார்கள்.

இவ்விரண்டு மருந்துகள் தவிர சல்பர், பேயோனியா, கிராபைட்டீஸ், தூஜா, இக்னேஷியா, Sedun Acre போன்ற சில மருந்துகளும் ஆசனவாய் பிளவுப் புண்களை முழுமையாகக் குணப்படுத்தும் முன்னணி மருந்துகளாகத் திகழ்கின்றன.

ஆசனவாய் அரிப்பு, நமைச்சல் (PRURITUS ANO) : ஆசனவாயைச் சுற்றித் தாங்க முடியாத அரிப்பு (Itching) ஏற்படுவதை தான் PRURITUS ANO என்கிறோம். பொது இடத்தில் இருக்கும் போது கூட ஒரு நபர் ஆசனவாயில் கை வைத்து தேய்த்துக் கொள்ளும் அளவுக்கு அரிப்பு இருக்கும். இதைக் காணும் பிறருக்கு அருவருப்பாக இருக்கும். ஆசனவாயைச் சுத்தமாக வைத்துக் கொள்ளாதவர்களுக்கும், குடற்பூச்சிகளால் பாதிக்கப்பட்டவர்களுக்கும் தான் இத்தகைய ஆசனவாய் அரிப்பு ஏற்படுகிறது. வயிற்றுப் பூச்சிகளால் பெரும்பாலும் குழந்தைகள் தான் இத்தகைய பாதிப்புக்கு உள்ளாகிறார்கள். சல்பர், நைட்ரிக் ஆசிட், காஸ்டிகம், லைகோ, சபடில்லா போன்ற ஹோமியோப்பதி மருந்துகள் இப்பிரச்னைக்கு முற்றுப்புள்ளி வைக்க உதவுகின்றன.

தொங்குசதை (POLYP) : மலக்குடலினுள்ளும் சில சமயம் ஆசனவாயின் வெளியேயும் தெரியும் தொங்குசதை POLYP எனப்படுகிறது. சிவப்பான ரத்தம் கசியும் சதை இது. ஆங்கில மருத்துவத்தில் இதனை POLYPECTOMY எனும் சிகிச்சை மூலம் அகற்றுகின்றனர். சிலருக்கு ஒன்றுக்கு மேல் இச்சதை இருந்தால் புற்றுநோயின் அறிகுறியாகவும் இருக்கலாம். இச்சதையை அறுவைச் சிகிச்சையின்றி குணமாக்க உதவும் சில முக்கிய ஹோமியோ மருந்துகள் : டுக்ரியம், பாஸ்பரஸ், தூஜா, காலிபுரோம்.

மலக்குடல் பிதுக்கம் (PROLAPSE RECTUM) : மலம் கழிக்கும் போது, மலக்குடல் முழுவதும் ஆசனவாய் வழியாக வெளியே தள்ளப்பட்டு பிதுங்கித் தொங்கும். இந்தச் சதை 3 அல்லது 4 அங்கும் நீளத்திற்குத் தொங்கும். இச்சதை பார்ப்பதற்கு அதிர்ச்சியையும் அருவருப்பையும் ஏற்படுத்தும். சிறு குழந்தைகளும், முதியவர்களும் பெரும்பாலும் பாதிக்கப்படுகிறார்கள். சிறுவயதில் வரும் இந்நோய் தானாகவே குணமாவதுண்டு. பெரியவர்களுக்கு வந்தால் மலக்குடலை உள்ளே தள்ளி நிலைநிறுத்தும் RECTOPEXY அறுவைச் சிகிச்சை ஆங்கில மருத்துவத்தில் மேற்கொள்ளப்படுகிறது. ஹோமியோபதியில் அறுவைச் சிகிச்சை தேவையில்லை ஆலோ, இக்னேசியா, மூரியாடிக் ஆசிட், போடோ பைலம், ரூடா, அபிஸ், கல்கேரியா கார்ப், சிலிகா, செபியா, மெர்க்சால் போன்ற ஹோமியோப்பதி மருந்துகள் மலக்குடல் இறக்கத்திற்கு முழு நிவாரணம் அளிக்கின்றன. கர்ப்பகாலத்தில் ஏற்படும் மலக்குடல் இறக்கத்திற்கு போடோபைலம், ரூடா ஆகிய இருமருந்துகள் அற்புதமாக பயன் தருகின்றன.

ஆசனவாய் நோய்களுக்கு ஹோமியோப்பதி மற்றும் இந்திய மருத்துவங்களில் மிகச் சிறந்த தீர்வுகள் கிடைக்கின்றன. பெரும்பாலான சந்தர்ப்பங்களில் ரத்தப்போக்கை உடனடியாக கட்டுப்படுத்த, கடுமையான வலியிலிருந்து விரைவாக நிவாரணம் கிடைக்க, பின் விளைவுகள் நிறைந்த அறுவைச் சிகிச்சைகளைத் தவிர்க்க ஹோமியோப்பதி உள்ளிட்ட மாற்றுமருத்துவங்களே மிகவும் சிறந்தவை.

Dr.S. வெங்கடாசலம்

மாற்றுமருத்துவ நிபுணர்

சாத்தூர் - 9443145700. Email: alltmed@gmail.com

(இங்கு கூறப்பட்ட மருந்துகள் ஒரு புரிதலுக்காகத் தான் கொடுக்கப்பட்டுள்ளது. அதனால் மருத்துவரின் ஆலோசனைப்படிதான் எந்த மருந்தையும் நோயாளிகள் எடுத்துக் கொள்ள வேண்டும்)

=========== ஆணி வேர்களைத் தேடி===========

நினைத்ததை நான் சாதிப்பேன்

Dr. T. மோகன் குமார்*

மார்கழித் திங்களின் முதல் நாள், வழக்கம்போல அலுவல்பணி தொடங்க ஆரம்பித்திருந்த இளங்காலை நேரம், மார்கழித் திங்கள் மதி நிறைந்த நன்னாளால் நீராடப் போதுவீர் போதுமினோ நேரிழையீர் ...

(மார்கழித் திங்களில் முழுநிலா ஒளிவீசும் நல்ல நாள் இது இன்று நாம் நீராடக் கிளம்புவோம் என்கின்ற திருப்பாவை வரிகளைப் பாடியவாரே) வேத விற்பனர்கள் அடங்கிய ஒரு கூட்டம் மருத்துவமனையின் உள்ளே பிரவேசித்திருந்தது,

மிக அழகிய தெள்ளத் தெளிவான நிதானமான , ஒற்றுமை குரலில் எவ்விதமான பிசிறும் ஏற்படாமல் பாரோர் புகழப் படிந்தேலோர் எம்பாவாய் ....என்ன பாடி முடித்த வாரே நமஸ்காரங்கள் சார், இந்தாருங்கள் துளசியும், பெருமாளின் பிரசாதங்களும் என்றவாரே மருத்துவமனையை பக்திப் பரவசமூட்டியிருந்தனர்.

செல்லுமிடம் அடையாளம் தெரியாமல் வழி தவறி நம் மருத்துவமனைக்குள் நுழைந்து விட்டனர் போல, என நினைத்தவாறே பிரசாதங்களை மிகவும் பவ்வியமுடன் பெற்றுக்கொண்டேன். திருவோண நட்சத்திரம், மகர ராசி, மோகன் குமார் ..என என் பெயரை சொல்லியவாறே அர்ச்சனை பொருட்களையும் தாம்பூலப் பையில் நீட்ட, சற்று திணறித்தான் போனேன். இவர்கள் வழிதவறி வந்தவர்கள் அல்ல, வழி தெரிந்து வந்தவர்கள்தான் என மனம் என்ன தொடங்கியிருந்த நேரம்,

அய்யா நமஸ்காரங்கள், தங்களின் உத்தரவு இன்றி உள்ளே நுழைந்ததற்கு வருந்துகின்றோம். நாங்கள் உங்கள் ஊரிலுள்ள ஒரு பிரபல பணக்காரரின் பெயரைச்சொல்லி அவர்களின் வீட்டிற்கு யாகம் செய்ய வந்துள்ளோம். மாதாமாதம் ஒரு குறிப்பிட்ட நட்சத்திர நன்னாளில் அந்தப் பணக்காரரின் பெயரைக் குறிப்பிட்டு அவரது ஒரே புத்திரருக்கு ஹோமம் செய்வது வழக்கம், இந்த மாத ஹோமம் செய்ய வந்துள்ளோம். பணக்காரர் சிவகோத்திரம் என்பதால் ஸ்ரீ ருத்ர ஹோமம் செய்ய தஞ்சாவூர் பகுதியைச் சார்ந்த வேத விற்பனர்களும், பணக்காரரின் மனைவி பெயரைச் சொல்லி அவர்கள் விஷ்ணு கோத்திரமானதால் தன்வந்திரி யாகம் உட்பட பல மூலிகை யாகங்களை செய்ய இங்கு வந்துள்ளோம். உங்க ஊர் பையனை பற்றி உங்களுக்கு நன்னா தெரிந்திருக்குமோ, இல்லையோ என கேள்வி எழுப்ப?

ஐயா, எனக்கு அந்தப் பையனைப் பற்றி எதுவும் தெரியாது? என பதில் கூற, சேமம் நாங்கள் வந்த வேலையை விட்டுவிட்டு பேச்சு மாறி போச்சு ஐயா, மீண்டும் மன்னிச்சுக்கோங்க என சொல்லியவாறே எங்களது குருநாதர் உங்களிடம் ஒரு உதவிக் கோரி எங்களை இங்கு அனுப்பி உள்ளார். இன்று மார்கழி 1 என்பதால் நாங்கள் அதிகாலையிலிருந்தே ஆண்டாளின் பாசுரங்களை பாடியவாரே ஊர்

முழுவதும் பெருமாளின் அற்புதங்களை விவரித்தவாரே நாங்கள் தங்கும் இடம் சென்று, காலை உணவு அங்கு அருந்திய பின் தங்களுக்கான தகவலை கொண்டு வந்துள்ளோம். எங்களது குருநாதர் தங்களிடம் அலைபேசியில் பேச உத்தேசித்துள்ளார், கால சூழ்நிலை காரணமாக அவரால் நேரில் வர இயலவில்லை, உங்கள் ஊரில் வசித்து தற்பொழுது எங்கள் மடத்தின் தலைமை வேதவிற்பனராக பொறுப்பேற்றுக் கொண்டவர்தான் எங்களின் குருநாதர், என விவரித்தவாரே அலைபேசியில் அழைப்பை ஏற்று பேச ஆரம்பித்திருந்தேன். நீங்கள் (அதாவது நான்) சிறுபிள்ளையாக இருக்கும் பொழுதே அவர் (வேதவிற்பனர்) இன்றைய ஊரை விட்டு வெளியில் சென்று விட்டேன், பெருமாளின் அனுக்கிரகத்தினால் இன்று மிக உயர்ந்த பதவியில் அமர்ந்து உள்ளேன். மாதா மாதம் எ(உ)ங்கள் ஊரின் மிகப் பெரும் பணக்காரரின் பெயரைச்சொல்லி, அவரின் மனம் நலிந்த புத்திரருக்கு மாதாமாதம் யாகமும் அதைத்தொடர்ந்து புண்ணிய காரியங்களும் செய்து வருகின்றோம். இது சற்று இரகசியமாக நடத்தப்படும்

ஒரு விஷயம் என்பதால் இதை பற்றின தகவல் எதுவும் வெளியில் கசியவில்லை. கடந்த ஆறு ஆண்டுகளாக இந்தப் பையனின் நடவடிக்கைகளில் எவ்விதமான முன்னேற்றமும், மாற்றமும் தெரியவில்லை. அன்று இருந்ததைப் போலவே இன்று வரையில் அச்சுப் பிசகாமல் அவ்வாறே அவன் உள்ளான். நான் இந்த முறை யாகம் நடத்துவதற்கு முன்பே அவர்களிடம் மிகத் தெளிவாகச் சொல்லிவிட்டேன், ஐயா இந்த புண்ணிய காரியங்கலினாலும், மாபெரும் யாகங்களினாலும் எவ்விதமான முன்னேற்றமும், பயனும் ஏற்படப் போவதில்லை.உண்மையை சொன்னால் நீங்கள் வருத்தப்படக்கூடாது கிட்டத்தட்ட 18 டின் நெய், 22 வகையான தாவர எண்ணெய் வகைகள் உட்பட, எண்ணிலடங்கா மூலிகைகள், ஒரு பக்கம் எங்களுக்கான ஊதியமும் வந்து செல்ல பயண ஏற்பாடுகளும் என சில பல லட்சங்களை கொட்டியும், எவ்விதமான முன்னேற்றமும் அவனது உடலில் ஏற்படவில்லை. உங்களைப் பற்றி பலகாலம் மிகவும் நல்லபடியாக கேள்வியுற்றதாலும், உங்கள் ஊரில் உள்ள பெருமாள் கோயில் அர்ச்சகர் என்னுடன் பிறந்தவர் என்பதாலும் தங்கள் நட்சத்திரங்களையும் ராசி அதிபதிகளையும், தெரிந்து கொண்டு தங்களுக்கு பிரசாதம் அனுப்பி உள்ளேன். தயைகூர்ந்து அதைப் பெற்றுக் கொள்ளுங்கள். அந்தப் பையனுக்காக சற்று நீங்கள் நேரம் ஒதுக்கினால் நான் அங்கு நேரில் வந்து அவனுக்கான மருந்தை தங்களிடம் இருந்து பெற்றுக் கொள்வேன் என வேண்டுகோள் விடுத்திருந்தார்.

அடுத்தடுத்து அதிர்ச்சி மாறாத நிலையில் வேறு ஏதும் பேசாமல் மாலையில் அவரை சந்திப்பதாக வாக்குறுதி கொடுத்தனுப்பி இருந்தேன் அவர்களது சிஷ்ய கோடிகளுக்கு. சற்றேறக்குறைய அதிர்ச்சியில் இருந்து மீளாமல் நம்ம ஊரில் இப்படி ஒரு சம்பவமா, நமக்கு எதுவும் தெரியவில்லையே, ஆனால் எங்கிருந்தோ வெளியூரிலிருந்து இங்கு வந்தவர் நம்மைப் பற்றிய முழு தகவல்களையும் அறிந்து இருக்கின்றாரே என்கின்ற ஆச்சரியம் ஒருபக்கமும், கோடிக்கணக்கில் செலவு செய்யும் எங்கள் ஊரின் முதன்மை செல்வந்தரின் நிலையையும் எண்ணி ஆதங்கப்பட்டவாறே மருத்துவப் பணிகளில் கவனம் செலுத்த ஆரம்பித்திருந்தேன். மாலையில் சொல்லியவாறே மிகச்சரியாக குறிப்பிட்ட நேரத்திற்கு வருகை புரிந்திருந்தார் நான் அரிந்திராத தலைமை வேதவிற்பனர் அவர்கள். பரஸ்பர

அறிமுகங்ககளுக்கு கிடையே மீண்டும் பணக்காரர்களின் செல்வமகனை பற்றிய பேச்சு தொடர ஆரம்பித்து இருந்தது. இன்று காலையில் நடந்த (வழக்கமாக) ஒரு சிறு சம்பவத்தை உங்களுக்கு கூற விரும்புகிறேன், இதிலிருந்து நீங்கள் இவனை பற்றி முழுமையாக தெரிந்து கொள்ளலாம் என நினைக்கின்றேன். உங்களுக்குத்தான் ஒரு துளி கிடைத்தால் போதுமே என கூறியவாறு மீண்டும் பேச ஆரம்பித்திருந்தார் நண்பர்.

காலையில் அவன் உணவு சாப்பிட வேண்டும் அதுவும் ஒரு ரெண்டு இட்லி, கொஞ்சம் சட்னி, ஒரு டம்ளர் பால் அவ்வளவுதான். காலையில் அவன் ஒரு எட்டு மணி அளவில் எழுந்து இருப்பான் என நினைக்கின்றேன். ஒரு பெரும் போராட்டமே நடத்தி தான் அவனை குளிக்க வைத்து உடை மாற்றுவார்கள்.

காலையில் இவன் வெளியில் வரும் போதே கிளாசிக் 2000 கார் மற்றும் சீருடை அணிந்த டிரைவர், உணவு ஊட்ட அவனது தாய் மற்றும் அவருக்கு துணைவியாக ஒரு ஆயா அம்மா, உட்பட இவர்கள் நால்வரும் பங்களாவில் இருந்து கிளம்பி ஒன்று கிழக்கே கள்ளக்குறிச்சி (ஆத்தூரில் இருந்து 50 கிலோமீட்டர் தொலைவில் உள்ள ஒரு ஊர்) அல்லது மேற்கே சென்றால் சேலம் (ஆத்தூரில் இருந்து 55 கிலோமீட்டர் தொலைவில் உள்ள ஒரு ஊர்), வடக்கே என்றால் கருமந்துறை (ஆத்தூரில் இருந்து சுமார் 50 கிலோ மீட்டருக்கு மேல் உள்ள ஒரு மலை வாசஸ்தலம்) தெற்கே என்றால் நிச்சயம் துறையூர் தான் (ஆத்தூரில் இருந்து சுமார் 68 கிலோ மீட்டர் தூரம் உள்ள மற்றுமொரு ஊர்) அதுவரையில் காரில் மிக வேகமாக பயணித்தால் மட்டும்தான் அவன் இந்த இரண்டு இட்லிகளையும் ஒரு டம்ளர் பாலையும் அருந்துவான். இடையில் காரின் வேகம் தடைபட்டாலோ, அதிவேகமற்று பயணம் செய்தாலோ அவ்வளவுதான்,

வாயில் உள்ள இட்லி ஒன்று டிரைவரின் மேல் அல்லது அவனது தாயாரின் மேல் அல்லது அந்த ஆயாவின் மேல் துப்புவான். காலை, மதியம், இரவு என மூன்று நேரமும் இப்படித்தான். சற்றேறக்குறைய 300 முதல் 350 கிலோ மீட்டர்கள் இவன் ஒரு நாள் உணவு அருந்த செல்லும் தூரம் ஆகும். வண்டி பயணப்பட வில்லை என்றால், எத்தனை நாட்களானாலும் உணவையோ தண்ணீரையோ அவன் அருந்துவதில்லை.

பல பணிக்கர்கள், உட்பட சோழி, சொக்கட்டான் உட்பட பல மாந்திரீகர்கள், எங்களைப் போன்று பல யாகங்கள் முன்னின்று நடத்தியும் எவ்விதமான முன்னேற்றமும் அவனுக்கு ஏற்படவில்லை. இதுதான் அவனது நிலைமை நீங்கள் வருத்தப்பட்டு விடக்கூடாது என்னால் அவனை இங்கு அழைத்து வர இயலாது, அவர்களாகவும் இங்கு வருவதென்பது சந்தேகத்திற்கு கிடமே, தாங்கள் ஏதாவது செய்து இந்த சமுதாய அவலத்தை தடுத்து நிறுத்துங்கள். என்னதான் வசதி வாய்ப்புகள் என்றாலும் பகவானுக்கே அடுக்காத செயல்கள் என்பதை என்னால் ஏற்றுக்கொள்ள இயலவில்லை . ஏதாவது செய்து தாருங்கள் உங்களுக்கு கோடி புண்ணியம் கிட்டும் என்றால் நமது நண்பர்.

ஒருநாள் உணவிற்காக அந்த பணக்கார தாயின் தாய்மை உணர்வு ஒரு பக்கம் என்றாலும், இந்த நோயைத் தீர்ப்பதற்காக அவருக்கு வழங்கப்பட்டிருந்த ஆலோசனைகளையும் வழிமுறைகளையும் எண்ணி சற்று அதிர்ச்சியுற்று

இருந்தேன். ஒரு வாய் உணவை சாப்பிடுவதற்காக பெரும் பொருளாதார இழப்பு என்பது ஒருபக்கம் என்றாலும், தான் நினைத்ததை மட்டும்தான் சாதிப்பேன் என வளரும் அவர்களின் வாரிசு அது வளர்ந்தபின் இந்த சமுதாயத்தில் என்ன வகையான நிலைப்பாட்டை மேற்கொள்ள போகின்றது என்கின்ற என் ஆதங்கமும் ஒருபக்கம் என்னை சிந்தனைக்கு உள்ளாக்கியது.

சமுதாய பேரழிவை எப்பாடுபட்டேனும் தடுத்திட வேண்டும் என்கின்ற ஆதங்கம் ஒரு பக்கம், ஹோமியோபதியின் மதிப்பை அறியாத இவர்களுக்கு அதன் மதிப்பை உணர்த்த வேண்டும் என்கின்ற என் நிலைப்பாடு ஒரு பக்கம் என் சிந்தனையை தூண்ட மிக விரைவாக அவனுக்கான மருந்தை தேர்ந்தெடுத்தேன்.

ஆய்வு :

கொடிய நோய்களில் இருந்து நிவாரணம் தரும் ஸ்ரீ ருத்ர ஹோமம் (கடந்தகால பாவ புண்ணியங்களை கடந்து முக்தி அடைவதற்கான வழிமுறை), ஆயுள் ஆரோக்கியத்தை அதிகரித்து நோய் நொடிகள் நீங்குவதற்கான தன்வந்திரி ஹோமம், இதற்கான பொருள் செலவு, கால செலவு, செய்யத் துணிந்த இவர்களுக்கு மருத்துவ செலவு செய்ய தோன்றாதது அதிசயமாகவே பட்டது. பணம் பத்தும் செய்யும் என்கின்ற மனப்பான்மையால், பணத்தால் வானத்தையும் வில்லாக்கி பார்க்கலாம் என்கின்ற தைரியமா? பணத்தால் மானத்தையும் மரியாதையையும் வாங்க இயலாது என்பதையாவது இவர்கள் உணர்ந்து இருப்பார்களோ என்ற வருத்தம் மேலோங்க அளவுக்கு மீறிய வசதி வாய்ப்புகளுடன் சமுதாயத்தில் ஆபத்தாக நடனமாடும் பாக்டீரியாவை கட்டுப்படுத்தும் நடவடிக்கையாக (Driven to changes at every movent ...etc , Restless while eating...etc , Desire to travel in always and all ways....etc.) Tuberculinum 10M+3 Dose மட்டும் வாரம் ஒருமுறை கொடுக்கச் சொல்லி தலைமை வேதவிற்பனர் அவர்களிடம் கொடுத்தனுப்பினேன் ...

மருந்து சாப்பிட்ட ஓரிரு நாட்களில் பயண தூரமும் பயண நேரமும் வெகுவாக குறைந்து விலையில்லா பயணமாக மாறி பணம், பெருமை, புகழ் இவை அனைத்தையும் தாண்டி அவ்மூவரையும் என் மருத்துவமனையினை நோக்கி அழைத்து வந்திருந்தது....

Dr. T. மோகன் குமார்.
Raj Homoeo clinic, Salem, Attur.
9842751859

உயிராற்றல்

ஓமியோப்பதி மருத்துவத்தில் உயிராற்றல் என்றால் என்ன? --5

சு.கருப்பையா

6. பிராணவாயு [Vital force] மற்றும் உணர்ச்சிகளுடன் அதன் தொடர்பு.

நோய் ஏற்படுவதற்கு முன்பு மனிதனின் மன நிலை [உணர்ச்சிகள்] மாறுகிறது என்பதை மருத்துவர் ஹானிமன் நமக்குக் கற்றுக் கொடுத்துள்ளார். மற்றும் ஹோமியோபதி மருந்தை பரிந்துரைக்கும் போது, நோயாளியின் உடல் மற்றும் மனநிலையைக் கருத்தில் கொள்ள வேண்டும் [நோயாளியை ஒட்டுமொத்தமாகக் கருத்தில் கொண்டு] என்று அவர் நமக்கு வழிகாட்டுகிறார். இதன் பொருள் என்னவென்றால், நோயாளியின் மனநிலை மட்டுமல்ல, நோயின் போது வெளிப்படும் அசாதாரண உணர்வுகள், அறிகுறிகள் மற்றும் அடையாளங்கள் ஆகியவற்றையும் நாம் கருத்தில் கொள்ள வேண்டும், ஏனெனில் அவை அந்தத் தனிநபரின் உண்மையான நிலையை முழுமையாக புரிந்து கொள்வதற்கும் சரியான மருந்துத் தேர்வுக்கும் நம்மை வழிநடத்துகின்றன என்கிறார் ஹானிமன்.

மனித மனம் உணர்ச்சிகளுக்கான மையமாகும். ஒவ்வொரு உணர்ச்சி மாறுபாடும் தனிநபரில் சில மாற்றங்களை [நல்லது அல்லது கெட்டது] உருவாக்குகிறது. மேலும், இந்த மாறுபாடுகள் உடல் ரீதியாக இயக்குநீர் சமநிலையின்மை [Hormonal imbalance] வடிவத்தில் வெளிப்படுத்துகின்றன. இந்த மாற்றங்கள் நீண்ட காலம் நீடித்தால்; அது நோய் செயல்முறையைத் தொடங்க வழிவகுக்கிறது.

உணர்ச்சி என்பது பயம், வெறுப்பு, அன்பு, கோபம், துக்கம் அல்லது மகிழ்ச்சி போன்ற ஒரு மன நிலை அல்லது உணர்வு ஆகும் , இது உணர்ச்சிப் புறணியால் [Emotional cortex] கட்டுப்படுத்தப்படும் ஒரு நனவான சிந்தனையாக இல்லாமல் ஒரு அகநிலை அனுபவமாக எழுகிறது. இதேபோல், மன அழுத்தமும் [Stress] நோய் நிலைக்கு வழிவகுக்கும். இது உடல் அல்லது உளவியல், புறணி அல்லது மூளையின் மேலுறை சுரப்புகள் அல்லது நரம்பியக்கடத்திகள் [adrenaline + noradrenaline, or Dopomine] மூலம் உணரப்பட்ட அல்லது உண்மையான எதிர்வினையாக இருந்தாலும், அது உடலின் ஒரு குறிப்பிட்ட பிரதிபலிப்பாகும்.

மனஅழுத்தம் உடலில் பாதகமான விளைவுகளை ஏற்படுத்துகிறது மற்றும் அதிகரித்த இதய துடிப்பு, இரத்த அழுத்தம், தசை களில் இறுக்கம் , சுவாசத்தின் அளவு , பிராணவாயு நுகர்வு, இரத்த சர்க்கரை, இரத்தத்தில் கொழுப்பு, இரத்த

உறைவு, வயிற்றில் அமில சுரப்பு, மனஅழுத்த இயக்குநீர் மற்றும் நரம்பியக்கடத்திகள் சுரப்பு உள்ளிட்ட சில நோய்களுக்கு காரணமாகிறது.

சில வலுவான உணர்ச்சிகள் மனித உடலில் திடீர் தாக்கத்தை ஏற்படுத்துகின்றன, இது சுவாசம் அல்லது மாரடைப்பு போன்ற திடீர் மரணத்திற்கு வழிவகுக்கும். மூச்சுத் திணறல் என்பது ஒரு வகையான சுவாச சிரமம் ஆகும். போதுமான காற்றோட்டம் மற்றும் பிராணவாயு தேவையை பூர்த்தி செய்ய இயலாமையுடன் தொடர்புடைய மன வேதனையையும் இது குறிக்கிறது. சில சூழ்நிலைகளில் சுவாச செயல்பாடுகள் இயல்பாக இருக்கலாம், இருப்பினும் அசாதாரண மனநிலை காரணமாக மூச்சுத் திணறல் ஏற்படலாம். இது நரம்பு மணடலத்தின் பாதிப்பு அல்லது உணர்ச்சிசார்ந்த மூச்சுத் திணறல் என்று அழைக்கப்படுகிறது.

பல நேரங்களில் உணர்ச்சிகளின் விளைவுகள் மற்றும் மன அழுத்தம் ஆகியவை ஒழுங்கற்ற, குறுகிய அல்லது கடினமான சுவாசத்திற்கு வழிவகுக்கிறது. இது உடலின் பிராணவாயு உட்கொள்ளலை பாதிக்கிறது. உடல் நலத்திற்குப் போதுமான பிராணவாயு வழங்கல் தேவைப்படுகிறது மற்றும் பிராணவாயு தேவை மற்றும் விநியோக விகிதத்தை பராமரிக்கும் சில சுவாச பயிற்சிகளை மேற்கொள்வதன் மூலம் இதை சரிசெய்ய முடியும். எனவே, ஆரோக்கியமான மற்றும் நீண்ட ஆயுளுக்கு நமது வாழ்க்கையின் சரியான மற்றும் பொருத்தமான சுவாசம் முக்கியமானது. மேலும், ஒவ்வொரு மருத்துவரும் வழக்கமான மற்றும் தாளமான சுவாசத்தின் முக்கியத்துவத்தைப் புரிந்துகொண்டு நோயாளி அதை பராமரிக்க ஆலோசனை வழங்க வேண்டும். சமநிலையான மனநிலையே உணர்ச்சிகளை ஒருநிலைப்படுத்துகிறது, அதுவே ஆரோக்கியமான வாழ்க்கைக்கு ஒரு திறவுகோலாகவும் இருக்கிறது.

7. உயிர் ஆற்றல் சீர்குலைவு - நோயியலின் தோற்றம்.

பெரும்பாலான நேரங்களில், உடலின் ஒரு பகுதிக்கு அல்லது ஒட்டுமொத்தமான உடலுக்கும், பிராணவாயு வழங்கல் [உயிர் ஆற்றல்] மாற்றப்பட்டால், எந்தவொரு நோயியல் அல்லது சுற்றுச்சூழல் காரணங்களாலும், அது பிராணவாயு பற்றாக்குறையின் காலத்தைப் பொறுத்து உயிரணுவுக்கு லேசான, மிதமான அல்லது கடுமையான காயத்தை ஏற்படுத்தும். இதனால், பிராணவாயு பற்றாக்குறை உயிரணுக்களின் வளர்சிதை மாற்றத்தில் ஏற்படும் இடையூறுக்கு நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ காரணமாகிறது, இதன் விளைவாக ஒவ்வொரு நோய்க்கும் அடிப்படையான பின்வரும் பட்டியலிடப்பட்ட நோய்க்குறியியல் ஏற்படுகிறது.

a) வீக்கம் [Inflammation]: எந்தவொரு காரணியினாலும் ஏற்படும் காயத்திற்கு உயிருள்ள திசுக்களின் உடலின் புறப்பகுதியில் ஏற்படும் எதிர்வினை இதுவாகும். உதாரணமாக, உடலின் பகுதிகள் சிவந்து காணப்படுதல் [Redness], வெப்பம் [Heat], வலி [Pain], வீக்கம் [Inflammation] மற்றும் செயல்பாடு இழப்பு [loss of function] ஆகியவை வீக்கத்தின் ஐந்து முக்கிய அறிகுறிகளாகும்.

b) இரத்த இயக்கக்கோளாறுகள் [Hemodynamic disorders]: இரத்த இயக்கக் கோளாறுகள் இரண்டு பரந்த பிரிவுகளைக் கொண்டதாக கருதப்படுகின்றன: 1. உடலினுள் சுற்றும் இரத்தத்தின் அளவில் ஏற்படும் தொந்தரவு: இவற்றில் உடலின் ஒரு பகுதியில் அளவிற்கு அதிகமாகக் இரத்தம் இருத்தல் [Hyperaemia] மற்றும் இறுக்கம் , இரத்தப்போக்கு மற்றும் அதிர்ச்சி ஆகியவை அடங்கும். 2. தடைசெய்யும் தன்மையின் சுற்றோட்டக் கோளாறுகள்: இவை இரத்த உறைவு,

இரத்தக் குழாயில் ஏற்படும் அடைப்பு அல்லது இரத்த ஓட்டத்தில் ஏற்படும் தடை, இரத்த ஊட்டக்குறைபாடு மற்றும் மாரடைப்பு [Thrombosis, embolism, ischemia, and infarction] ஆகியவை ஆகும்.

c) நோய்த்தொற்று மற்றும் ஒட்டுண்ணி நோய்கள் [Infectious and parasitic diseases]: உடலில் பிராணவாயுவின் அளவு [உயிர் ஆற்றல்] நீண்ட காலத்திற்கு மிகக் குறைவாக இருக்கும்போது, உடல் அனைத்து வகையான தீங்கு விளைவிக்கும் நுண்ணுயிரிகள், நோய்க்கிருமிகள், பூஞ்சைகள், ஒட்டுண்ணிகள் மற்றும் பிற தொற்று நோய்களுக்கும் [bacteria, viruses, fungus, Parasites, and other infectious agents] சரியான உணவளிக்கும் இடமாக மாறும். சுருக்கமாக கூறினால், பெரும்பாலான தொற்று நோய்கள் பிராணவாயு நிறைந்த அல்லது சீரான அளவில் இருக்கும் சூழலில் வாழ முடியாது.

d) சுற்றுச்சூழல் மற்றும் ஊட்டச்சத்து நோய்கள் [Environmental and nutritional diseases]: 1. சுற்றுச்சூழல் நோய்கள்: இவை காற்று மாசுபாடு [நிலக்கரி, தூசி, மணல்சத்து , கல்நார்], புகையிலை புகைத்தல், கார்பன் மோனாக்சைடு [வாகன வெளியேற்றம், புகையிலை போன்றவற்றிலிருந்து] போன்றவை ஆகும். அதேபோல், சுற்றுச்சூழலில் கார்பன் மற்றும் நைட்ரஜன் அணுக்களால் ஆன வேதிச்சேர்மம் [Cyanide] , வார்ப்புப்பொருள்கள் [Plastics], பட்டு [Silk] போன்றவற்றை எரிப்பதன் மூலம் வெளியிடப்படுகிறது. 2. ஊட்டச்சத்து நோய்கள்: புரதங்கள், கொழுப்புகள், சர்க்கரை, நார்ச்சத்து மற்றும் மாவுப்பொருள், வைட்டமின்கள், தாதுக்கள் மற்றும் நீர் ஆகியவை ஒவ்வொரு உயிரணுவின் அடித்தளத்திற்கும் அவற்றின் இணக்கமான செயல்பாடுகளுக்கும் காரணமான அத்தியாவசிய ஊட்டச்சத்துக்களின் அடிப்படைக்குழுக்கள் ஆகும். எந்தவொரு அத்தியாவசிய ஊட்டச்சத்துக்களின் பற்றாக்குறை அல்லது அதிகப்படியானது ஊட்டச்சத்து நோய்களை உருவாக்குகிறது மற்றும் உயிரணுக்களும் நோய்வாய்ப்படுகிறது; அதனால் உடல் போதுமான அளவு உயிர் ஆற்றலைப் பெறாது.

e) உயிரணுக்களின் அசாதாரண வளர்ச்சி [Neaplasia]: ஹோமியோபதி தத்துவத்தின்படி, உயிரணுக்களின் அசாதாரண வளர்ச்சி என்பது மேகவெட்டை நோய்மூலக்கூறுவின் பிரதிநிதித்துவம் ஆகும். மனித உடலில் பிராணவாயு பற்றாக்குறை ஏற்படும் போதெல்லாம், உயிரணுக்கள் அசாதாரண நடத்தையைத் தொடங்குகின்றன. இந்த நிலை தொடர்ந்தால், படிப்படியாக, உயிரணுக்கள் கட்டுப்பாடற்ற வளர்ச்சிக்கு உட்படுகின்றன மற்றும் கட்டிகள் உருவாகின்றன; அது தீங்கற்றதாகவோ அல்லது கேடு விளைவிப்பதாகவோ [Benign or malignant] இருக்கலாம். உயிரணுக்களின் அசாதாரண வளர்ச்சி என்பது புதிய வளர்ச்சியைக் குறிக்கிறது; உருவாகும் புதிய வளர்ச்சி கட்டிகள் அல்லது புற்றுநோயின் வளர்ச்சி என்று அழைக்கப்படுகிறது. இந்த கட்டிகள் அல்லது புற்றுநோயின் வளர்ச்சி உடலின் வெளிப்புறப்பகுதிகளில் மெதுவாக வளர்ந்தால் , அது "தீங்கற்றதாக" இருக்கலாம். அவை சுயாதீனமாகவும் விரைவாகவும் பெருகும்போது அவை "கேடு விளைவிக்கிற " விதமாக மாறும்.

f) தடுப்பாற்று நோயியல் அல்லது நோய் எதிர்ப்பாற்றல் நோயியல் [Immunopathology]: நோய் எதிர்ப்பாற்றல் நோயியல் நிலைகளில் உயிர் ஆற்றல் [பிராணவாயு] முக்கிய பங்கு வகிக்கிறது. மற்ற நோய்களைப் போலவே, நோயெதிர்ப்பு குறைபாடு நோய்களும் நோயெதிர்ப்பு மண்டலங்களின் சில குறைபாடுள்ள கூறுகளை உருவாக்கும் நோயெதிர்ப்பு உயிரணுக்களுக்கு போதுமான பிராணவாயு வழங்கல் இல்லாததால் ஏற்படுகின்றன; இது நோயெதிர்ப்பு உயிரணு சரியாக செயல்படத் தவறி, தேவையான பிறபொருளெதிரிகள் அல்லது எதிர்ப்புப் புரதங்களை [Antibodies] உற்பத்தி செய்ய முடியாமல் போகிறது. நோய் எதிர்ப்பு ஆற்றல் என்பது நோய்க்கிருமி

தாக்குதலுக்கு எதிரான உடலின் எதிர்ப்பாகும். உடலில் நுழையும் அனைத்து வகையான நுண்ணுயிரிகள், நோய்க்கிருமிகள் மற்றும் நச்சுப் பொருட்கள் போன்றவற்றை எதிர்க்கும் உடலின் திறன் இது.

g) மரபணு நோய்கள் [Genetic diseases]: நவீன அறிவியலின் படி மரபணு கோளாறு கணிக்க முடியாதது. பெரும்பாலான மரபணு கோளாறுகள் அணு மரபணுவில் உள்ள குறைபாட்டால் ஏற்படுகின்றன. இருப்பினும், பெரும்பாலான குறிப்பிடத்தக்க நோய்கள் இழைமணி அல்லது ஊன்குருத்து பிறழ்வுகளின் [Mitochondrial mutations] விளைவாகும். தீவிர மருத்துவ காரணங்களால் ஏற்படும் உயிரணு காயமும் மரபணு கோளாறுகளுக்கு காரணமாகும்.

இவ்வாறு, ஒவ்வொரு உயிரணுவுக்கும் ஒவ்வொரு நொடியும் போதுமான அளவு பிராணவாயு தேவைப்படுகிறது என்பது நிரூபிக்கப்பட்டுள்ளது. உயிரணுக்கள் போதுமான அளவு பிராணவாயுவைப் பெற முடியாவிட்டால், அது உடனடியாக தொந்தரவு செய்யும் செயல்பாடுகளுக்கு வழிவகுக்கிறது. திசுக்களுக்குத் தேவையான ஆக்சிஜன் கிடைக்காத நிலை [Hypoxia] தொடர்ந்தால் உயிரணு செயலிழக்கத் தொடங்குகிறது. மாற்றப்பட்ட வளர்சிதை மாற்றம் காரணமாக கழிவுகள் குவிந்து குறைபாடுள்ள புரத உற்பத்தி ஏற்படுகிறது. இது இறுதியில் இனக்கீற்று அமிலம் [(Deoxyribonucleic acid- DNA) இது ஒரு உயிரினத்தின் வளர்ச்சி, செயல்பாடு மற்றும் இனப்பெருக்கத்திற்கான மரபணுத் தகவல்களைக் கொண்டு செல்லும் ஒரு மூலக்கூறு ஆகும்] மற்றும் இரைபோ கருவமிலம் [(Ribonucleic acid- RNA) இது மரபணு தகவல்களைக் கடத்துவதற்கும், புரத உற்பத்திக்கு உதவுவதற்கும், பெரும்பாலான உயிரியல் செயல்பாடுகளுக்கும் இன்றியமையாத ஒரு கருவமிலம் ஆகும்] தொகுப்பை பாதிக்கிறது. மரபணுக்களின் புரத வரிசை சீர்குலைந்து மரபணு குறியீட்டை [Genetic code] மாற்றுகிறது.

8. பிராணவாயு மற்றும் ஹோமியோபதி மருத்துவத்துடன் அதன் தொடர்பு.

மனித உடலில் ஹோமியோபதி மருத்துவத்தின் விளைவைப் புரிந்துகொள்வதற்கு முன், நரம்பு மண்டல உடலியல் பற்றிய புரிதல் அவசியமாகிறது. நரம்பு மண்டலத்தின் இரண்டு முக்கிய பிரிவுகள் உள்ளன . அவையாவன: மத்திய நரம்பு மண்டலம் [Central Nervous System- CNS] மற்றும் புற நரம்பு மண்டலம் [Peripherry Nervous System- PNS] ஆகியவை ஆகும். மத்திய நரம்பு மண்டலம், மூளை மற்றும் முதுகுத் தண்டு ஆகியவற்றைக் கொண்டுள்ளது. மத்திய நரம்பு மண்டலத்தின் வழியாக உள்ளே வரும் பல வகையான புலன் தகவல்கள் ஒருங்கிணைக்கப்பட்டு ஒன்றோடு ஒன்று தொடர்பு ஏற்படுத்தப்படுகின்றன , எண்ணங்களும் உணர்ச்சிகளும் உருவாக்கப்படுகின்றன, மேலும் நினைவுகள் உருவாகி சேமிக்கப்படுகின்றன. தசைகள் சுருங்கவும் சுரப்பிகள் சுருங்கவும் தூண்டும் பெரும்பாலான நரம்பு தூண்டுதல்கள் மத்திய நரம்பு மண்டலத்தில் உருவாகின்றன.

மத்திய நரம்பு மண்டலம் [CNS], உடலின் புற பாகங்களில் உள்ள புலன் ஏற்பிகள், தசைகள் மற்றும் சுரப்பிகளுடன் புற நரம்பு மண்டலம் மூலம் இணைக்கப்பட்டுள்ளது. புற நரம்பு மண்டலம் மூளையில் இருந்து எழும் தலையின் நரம்புகளையும், முதுகுத் தண்டிலிருந்து வெளிப்படும் முதுகெலும்பு நரம்புகளையும் கொண்டுள்ளது. புற நரம்பு மண்டலம் மேலும் உடல்கூறுசார்ந்த நரம்பு மண்டலம் [Somatic Nervous System] மற்றும் தன்னியக்க நரம்பு மண்டலம் [Autonomic Nervous System] என்று இரண்டாகப் பிரிக்கப்பட்டுள்ளது .

உடல்கூறுசார்ந்த நரம்பு மண்டலம்[SNS] என்பது, தோல் மற்றும் சிறப்பு உணர்வு ஏற்பிகளிலிருந்து தகவல்களை முதன்மையாக தலை, உடல் சுவர் மற்றும் கைகால்களில் உள்ள மத்திய நரம்பு மண்டலத்துக்கும் [CNS] , அந்த மத்திய நரம்பு மண்டலத்திலிருந்து எலும்பு தசைகளுக்கு மட்டுமே தூண்டுதல்களை நடத்தும் இயக்கம் சார்ந்த நரம்பணுக்களுக்கு தகவல்களை அனுப்பும் உணர்ச்சி நரம்பணுக்களைக் கொண்டுள்ளது. இந்த இயக்கம் சார்ந்த எதிர்செயல்களைக் கட்டுப்படுத்த முடியும் என்பதால், உடல்கூறுசார்ந்த நரம்பு மண்டலத்தின் இந்தப் பகுதி தன்னிச்சையாக செயலாற்றுகிறது.

தன்னியக்க நரம்பு மண்டலம் [ANS] என்பது, முதன்மையாக உள்ளுறுப்புகளில் உள்ள ஏற்பிகளிலிருந்து மத்திய நரம்பு மண்டலத்துக்கும், மென்மையான தசை, இதய தசை மற்றும் சுரப்பிகளுக்கு தூண்டுதல்களை நடத்தும் நரம்பு மண்டலத்திலிருந்து இயக்க நரம்பணுக்களுக்கு தகவல்களை அனுப்பும் உணர்ச்சி நரம்பணுக்களைக் கொண்டுள்ளது. அதன் இயக்கம் சார்ந்த எதிர்செயல்கள் பொதுவாக உணர்வுகளின் கட்டுப்பாட்டின் கீழ் இல்லாததால், தன்னியக்க நரம்பு மண்டலம் தன்னிச்சையாக இயங்க இயலாது.

தன்னியக்க நரம்பு மண்டலத்தின் இயக்கப்பகுதி, உணர்ச்சிகளை செலுத்தும் பிரிவு மற்றும் அதன் துணைப் பிரிவு என இரண்டு கிளைகளைக் கொண்டுள்ளது. சில விதிவிலக்குகளுடன், உள்ளுறுப்புகள் இரண்டிலிருந்தும் வழிமுறைகளைப் பெறுகின்றன. பொதுவாக, இரண்டு பிரிவுகளும் எதிர் செயல்களைக் கொண்டுள்ளன. எடுத்துக்காட்டாக, உணர்ச்சிகளை செலுத்தும் நரம்பணுக்கள் இதயத்துடிப்பை வேகப்படுத்துகின்றன, அதே நேரத்தில் துணைப் பிரிவிலுள்ள நரம்பணுக்கள் அதை மெதுவாக்குகின்றன. உணர்ச்சிகளை செலுத்தும் நரம்பணுக்களால் ஊக்குவிக்கப்படும் செயல்முறைகள் பெரும்பாலும் ஆற்றலைச் செலவிடுவதை உள்ளடக்கியது, அதே நேரத்தில் துணைப்பிரிவு நரம்பணுக்களால் ஊக்குவிக்கப்படும் செயல்முறைகள் உடல் ஆற்றலை மீட்டெடுத்து பாதுகாக்கின்றன. இவை உடலின் நரம்பு மண்டலத்தின் செயல்பாடுகள்.

இப்போது, ஹோமியோபதி மருந்துகள் நரம்பு மண்டலத்திலும் உடலிலும் எவ்வாறு செயல்படுகின்றன என்பதை நாம் புரிந்து கொள்ளலாம்.

ஹோமியோபதி மருந்துகள் மிகவும் நுண்ணிய அளவில் ஆற்றல் வடிவிலானது. அவற்றை அணுக்கள், மூலக்கூறுகள் போன்ற மிகச்சிறிய அளவிலான பொருள்களை அளவிட பயன்படுத்தப்படும் நானோமீட்டர்களில் கூட கணக்கிடுவது சாத்தியமில்லை. மாமேதை ஹானிமன் ஹோமியோபதி மருந்துகளை தயாரிப்பதற்கான ஒரு சிறந்த முறையை வெற்றிகரமாக முன்வைத்துள்ளார் [ஆற்றல் மயமாக்கல்]. அது நீர்த்தல் மற்றும் வீரியப்படுத்தப்படும் போது மிக நுண்ணிய ஆற்றல் வடிவமாக மாறுகிறது , அது அம்மருந்தின் ஆற்றலைக் கொண்டுள்ளது. இந்த செயல்முறைகள் மருந்தின் சிறந்த மருத்துவ திறனைப் பாதுகாக்கின்றன. ஒவ்வொரு சிறந்த நுண்ணிய மூலக்கூறும் மிக உயர்ந்த அளவிலான மருத்துவ பண்புகளைக் கொண்டுள்ளது.

ஹோமியோபதி மருந்துகளின் மருத்துவப்பண்புகள் எரிசாராயத்தினால் பாதுகாக்கப்படுகின்றன. ஹோமியோபதி மருந்துகளின் சக்திவாய்ந்த வடிவத்தை எடுத்துச் செல்வதற்கு எரிசாராயம் அல்லது சர்க்கரை பாலுருண்டைகள் மூலம் சேமிக்கப்படுகின்றன. ஹோமியோபதி மருந்துகளின் செயல்பாடு நுண்ணிய மூலக்கூறு அளவை உட்கொள்வதிலிருந்து தொடங்குகிறது. நோயாளி அல்லது நோயாளிகள் சக்திவாய்ந்த மருந்தின் முதல் அளவை [வாய் வழியாக] எடுத்துக் கொள்ளும்போது, மருந்திடப்பட்ட சர்க்கரை பாலுருண்டைகள் உமிழ்நீரில் கரையத்

தொடங்கி, வாயின் நரம்புகள், நாக்கு மற்றும் நுகர்வு அல்லது மோப்ப நரம்புகள் ஆகியவற்றை ஒரே நேரத்தில் ஏற்பிகள் மூலம் தூண்டுவதன் மூலம் அதன் செயல்பாட்டைத் தொடங்குகின்றன. சில நொடிகளில் வாய் ஏற்பிகள் ஹோமியோபதி மருந்துகளின் நுண்ணிய மூலக்கூறு பொருட்களால் தூண்டப்படுகின்றன. அந்த மருந்துக் கூறுகளின் பண்புகள் மற்றும் பண்புகளை அறிந்த பிறகு, பெருமூளைப் புறணி மற்றும் மூளையின் அடிப்பகுதிகளில் அவற்றின் பொருத்தமான செயல்களைத் தொடங்குகின்றன. பின்னர் அந்தந்த மாற்றங்கள் உயிரணுக்களில் நிகழ்கின்றன.

உயிரினத்தின் நலத்தை நிலைநிறுத்தவும், அனைத்து உறுப்புகளையும் அதன் உகந்த செயல்பாட்டிற்கு கொண்டு வரவும், சரியான பிராணவாயு வழங்கல் அவசியம் ஆகும். ஹோமியோபதி மருத்துவம் அதே நோக்கத்திற்காக செயல்படுகிறது. ஏற்பிகள் மற்றும் மத்திய நரம்பு மண்டலம் [CNS] வழியாக, இது உயிரணுக்கள் கொண்ட உறுப்புகள், குறிப்பாக இழைமணி/ஊன்குருத்து [(Mitochondria) உயிரணுவுக்கு ஆற்றல் வழங்கும் நுண்ணுறுப்பு] ஆகியவற்றில் அதன் விளைவைக் காட்டுகிறது. இது இழைமணிகளில் அதிக பிராணவாயு மூலக்கூறுகளைப் பயன்படுத்தத் தூண்டுகிறது மற்றும் உடலின் சரியான செயல்பாடு மற்றும் பாதுகாப்பு பொறிமுறைக்குத் தேவையான காற்றோட்டம் சார்ந்த வளர்சிதை மாற்றத்தை மீண்டும் நிறுவுகிறது. இதனால், உயிரணுக்களின் அசாதாரண செயல்பாட்டை சரியாக தேர்ந்தெடுக்கப்பட்ட ஹோமியோபதி மருந்தின் மூலம் இயல்பு நிலைக்குக் கொண்டுவரமுடியும். இது தான் ஹோமியோபதி மருந்துகளின் ஆற்றல் வடிவிலான செயலாகும். இதுவே, நோயாளியை நலப்படுத்துவதற்கான மிக விரைவான மற்றும் மென்மையான வழியாகும்.

9. உயிர் ஆற்றலின் முக்கியத்துவம் [Oxygen].

உயிர் ஆற்றல் பற்றி பல தவறான கருத்துக்கள் இருப்பதை நாம் ஏற்கனவே புரிந்து கொண்டுள்ளோம். அதற்கு மின்னியக்கவியல் அல்லது மின்னியக்கவிசையியல் , எளிய பொருள், இயற்கைக்கு அப்பாற்பட்ட ஆற்றல் , ஆன்மீக ஆற்றல் [electro-dynamic force, simple substance, supernatural power, spiritual power etc] போன்ற வெவ்வேறு பெயர்களை பல பிரபல ஹோமியோபதியர்கள் முன்வைக்கின்றனர், அவை புரிந்துகொள்ளக்கூடிய எந்த அர்த்தத்தையும் தருவதில்லை. இந்தக் கருத்துக்கள் அனைத்தும் ஹோமியோபதி மருத்துவர்களுக்கு, குறிப்பாக வளர்ந்து வரும் ஹோமியோபதி மருத்துவர்களுக்கு குழப்பத்தை ஏற்படுத்துகின்றன. ஹோமியோபதி தத்துவத்தை விளக்கும் போது, மாமேதை ஹானிமன், உயிர் ஆற்றல் , ஆரோக்கியம், நோய் மற்றும் நலப்படுத்துதலில் முக்கிய பங்கு வகிக்கிறது என்று குறிப்பிட்டுள்ளார் , மேலும் இந்த கருத்தை மிகச் சிறப்பாக முன்வைத்துள்ளார் . ஆனால் உயிர் ஆற்றல் என்ற கருத்துக்கு அறிவியல் விளக்கம் இல்லாததால், உயிர் ஆற்றலின் மாறுபட்ட வரையறைகள் மற்றும் கோட்பாடுகள் தோன்றின, மேலும் இந்த வெவ்வேறு பார்வைகளிலிருந்து தவறான பயணமும் தொடங்கியது.

நவீன மருத்துவ அறிவியல் உயிர் ஆற்றல் என்ற கருத்தைப் பற்றிய தெளிவற்ற விளக்கங்களை ஒருபோதும் ஏற்றுக்கொள்ளாது, ஏனெனில் ஒவ்வொரு அறிவியலும் அறிவியல் விதிகள், கொள்கைகள் மற்றும் நிரூபணங்களை அடிப்படையாகக் கொண்டது. புதிதாக வளர்ந்து வரும் நானோ தொழில்நுட்பம் மற்றும் மூலக்கூறு அறிவியல் மிக நுண்ணிய பொருட்களின் இருப்பை ஏற்றுக்கொள்கின்றன. உயிரணுக்கள் மற்றும் உடலியல் செயல்பாடுகளில் இன்னும் புதிய விஷயங்கள்

சேர்க்கப்படுகின்றன. எனவே, இன்னும் கற்றுக்கொள்ள வேண்டிய விஷயங்கள் நிறைய உள்ளன என்ற முடிவுக்கு வரலாம்.

உயிர் ஆற்றல் பற்றிய பல்வேறு தவறான கருத்துக்களில் ஒன்று, ஆன்மா தான் நோயாளியை நலப்படுத்துவதற்கான மைய சக்தி என்று சிலர் நம்புவதும் , மனம் தான் நலமாக்குகிறது என்று மற்றவர்கள் நம்புவதும் தான் . அவர்கள் மனதின் அறிகுறிகளின் மூலம் நோயாளியைப் பார்க்க முயற்சிக்கிறார்கள். பின்னர் உடலில் தோன்றும் தலைமைக்குறிகளுக்கு முக்கியத்துவம் தான் என்ன? ஹானிமன் ஏன் தனது மருந்து நிரூபணம் மற்றும் மருந்தியல் களஞ்சியத்தில் தலைமைக்குறிகளையும், விசித்திரமான மற்றும் சிறப்பியல்பு அறிகுறிகளையும் சேர்த்தார்? அவர் ஏன் மனதின் அறிகுறிகளை மட்டும் சேர்க்கவில்லை? ஒட்டுமொத்த அறிகுறிகளின் முக்கியத்துவம் என்ன? இது போன்ற கேள்விகள் எழுகிறது அல்லவா! .

எனவே, மருத்துவர்கள் மனதின் அறிகுறிகளை மட்டுமே நம்பியிருந்தால், அது ஒருதலைப்பட்சமாக மருந்து பரிந்துரை செய்வதாக இருக்கும். நோயாளிக்கு பரிந்துரை செய்த மருந்துக்கு எந்த அறிவியல் நியாயமும் இருக்காது, மேலும் நலப்படுத்தும் செயல்முறை குறித்தும் பெரிய சந்தேகம் இருக்கும். ஒரு மருத்துவர், மனதின் அறிகுறிகளுக்கு மட்டுமே முக்கியத்துவம் கொடுத்த பிறகு, "ஒத்தது ஒத்ததை போக்கும் " என்ற விதி தவறாகப் பின்பற்றப்படுகிறது என்பது தானே பொருளாகிறது ? இந்தக் கேள்விகளுக்கான பதில், நோயாளியின் சிறப்பியல்பு அறிகுறிகள், உணர்வுகள், தட்பவெப்பம், தலைமைகுறிகள் மற்றும் மனக்குறிகள் ஆகியவற்றை உள்ளடக்கிய அறிகுறிகளின் முழுமை பற்றிய ஹானிமனின் கருத்தை மட்டுமே பின்பற்றுவதாகும்.

ஹோமியோபதி மருந்துகள் உயிரணுக்கள் ஏற்பி அமைப்பைச் [Cellular receptor system] செயல்படுத்துகிறது. அதன்படி, செயற்கை நோயாகக் கொடுக்கப்பட்ட மருந்தின் ஆற்றல் , அந்த குறிப்பிட்ட மருந்தின் தனித்துவமான அறிகுறிகள் ஏற்பிகளின் வழியாக உயிரணுக்களை சென்றடைகிறது. மருந்து நிரூபணத்தின் போது அறிகுறிகள் ஏற்பட்டது போல், செயற்கை நோயை உருவாக்கும் ஆற்றலையை ஏற்பிகள் அடையாளம் காண்கின்றன. பிராணவாயு பற்றாக்குறை மனித உடலில் நோய் மற்றும் அசாதாரண உணர்வுகளை உருவாக்குகிறது, அவை ஏற்பிகள் மூலம் மத்திய நரம்பு மண்டலத்தால் அங்கீகரிக்கப்படுகின்றன. எனவே, உடலின் ஆரோக்கியமான மற்றும் இணக்கமான நிலைக்கு பொருத்தமான பிராணவாயு விநியோகம் தேவைப்படுகிறது. எனவே, "உயிர் ஆற்றல் என்பது பிராணவாயு ஆற்றலைத் தவிர வேறில்லை" என்று நாம் முடிவு செய்யலாம் என்று மருத்துவர் அமர்சின்ஹா டி. நிகாம் தனது " உயிர் ஆற்றல் என்பது பிராணவாயு [Vital Force is Oxygen] " என்ற நூலில் தெளிவாக விளக்கியுள்ளார். மேலும் பிராணவாயு பற்றிய பல விரிவான விளக்கத்தை எடுத்துக்காட்டுகளுடன் அந்த நூலில் கொடுத்துள்ளார். மேற்கண்ட நூலை இளம் ஹோமியோபதியர்கள் மட்டுமல்ல, அனுபவம் நிறைந்தவர்களும் கட்டாயம் வாசிக்கவேண்டும் என்று பரிந்துரை செய்கிறேன்.

----------தொடரும்

சு.கருப்பையா
மதுரை.

உயிர் ஆற்றல்

அக்டோபர்- 2025



Contact சு.கருப்பையா, 94861 02431